RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 30, 29 டிசம்பர் 2023 இதழ்:- 33

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லக் குழந்தைகளுக்கு 2024 ஜனவரி 10ம் திகதி முதல் 31ம் திகதி வரை உணவளிக்கவுள்ள கருணையாளர்கள் தயவு செய்து 10 ஜனவரி 2024 திகதிக்கு முன்னதாக தங்கள் விபரங்களைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். காரணம் பெரிதாக ஒன்றுமில்லை. இரு வார கால விடுமுறை தேவைப்படுகின்றது. அனைத்துச் செயற்திட்டங்களும் வழமை போன்று நடைபெறும். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## ஈழத்தமிழரையும் - ஈழ விடுதலையையும் நேசித்த மாமனிதரும் தே.மு.தி.க. தலைவரும் நடிகருமான விஜயகாந் விடை பெற்றார்



ஈழத்தமிழினத்தையும் ஈழ விடுதலையையும் நேசித்த மாமனிதரும் தே.மு.தி.க தலைவரும் நடிகருமான விஜயகாந் நேற்று 28 டிசம்பர் 2023 வியாழக்கிழமை உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார். உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்துள்ளார். 2005ஆம் ஆண்டில் தேமுதிக (3ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு மின்னிதழில் பார்க்க
**eelanadu.ca**

## ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக தமிழர் இன்னும் தீர்மானம் இல்லை என்கிறார் சம்பந்தர்



ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது? அல்லது தமிழ்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளரைக் களமிறக்குவதா? அல்லது ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்காமல் தேர்தலைப் புறக்கணிப்பதா? என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. அது தொடர்பில் இன்னமும் நாம் யோசிக்கவும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (5ம் பக்கம் பார்க்க)

## சாதனையாளர்களைக் கௌரவித்து சிறப்பாக நடைபெற்ற கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் 11வது ஆண்டு விழா





NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

## SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!



**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com

HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N & Conlin Rd**



Oshawa $279,000
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

**Eglinton / Mccowan**



Scarborough $499,900
Bedrooms: 2 Washrooms: 2
Convenience living on Eglinton line

**Warden Ave / Enterprise Blvd**



Markham $749,000
Bedrooms: 1+1 Washrooms: 2
Direct Access to Hwy 7 & 407

**Dundas/Hurontario St**



Mississauga $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

**Warden/Steeles**



Scarborough $760,000
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1900 Sqft Of Living Space

**Main St. E & Russell St.**



Southgate $799,999
Bedrooms: 4 Washrooms: 3
Detached Home W/3063 Sq Ft

**Kennedy Rd & Bovaild Dr. E**



Brampton $1,100,000
Bedrooms: 3 Washrooms: 3
recently renovated, sep. entrances

**Eglinton Ave & Danforth Rd**



Toronto $1,150,000
Bedrooms: 4 Washrooms: 4
Low Maintenance Fees.

**Fletcherscreek Blvd/Bovaird Dr**



Brampton $3,500
Bedrooms: 3 Washrooms: 4
Lots Of Upgrades!

**Markham Rd & Lawrence Ave**

FOR LEASE



Scarborough $2,000
Basement for lease
Close To TTC, Shopping & 401.

**Meadowvale / Sheppard**

FOR LEASE



Scarborough $1,[illegible]000
Bedrooms: 1 Washrooms: 1
Great neighbourhood

**9th Line/14th Ave**



Markham $1,689,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly renovated luxury home

Looking for more house?

# www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

# ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் ஒரு கண்துடைப்பு முயற்சியே! சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் சுட்டிக் காட்டு

இலங்கையில் கடந்தகாலங்களில் நியமிக்கப்பட்ட அனைத்து ஜனாதிபதி ஆணைக் குழுக்களும் என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டனவே தவிர, அவை 'யார் அதனைச் செய்தது என்பதைக் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

இதேவேளை தற்போதைய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் அதனை ஒத்த நடவடிக்கையா என்றும் அது கேள்வி எழுப்பியிருக்கின்றது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்துவரும் முயற்சிகள் பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரதும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில் இது குறித்து யஸ்மின் சூக்கா தலைமை யிலான சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான செயற்திட்டம் மேலும் கூறியிருப்பதாவது:

இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி) அட்டூழிய ங்கள் இடம்பெற்ற 1989 ஜீலை மாத காலப்பகுதியில் கம்பஹா மாவட்டத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட அதிகாரி ரத்நாயக்க இன்னமும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

ஏனெனில் இலங்கையில் நியமிக்கப்பட்ட அனைத்து அதிபர் ஆணைக் குழுக்களும் என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டனவே தவிர, யார் அதனைச் செய்தது என்று கண்டறிவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக கடந்தகால வரலாறு மீளத் திரும்புகின்றதா?

மனித உரிமைகள் செயற்பாட்டாளரான எம்.சி.எம்.இக்பால் போன்றவர்களின் பங்கேற்புடன் முன்னர் இயங்கிய பல்வேறு ஆணைக்குழுக்கள் மிகக்கடினமாக உழைத்த போதிலும், அப்போதைய காலப்பகுதியில் சாதாரண வன்முறைகளாக விபரிக்கப்பட்டவை அனைத்தும் மிகுந்த அதிர்ச்சியளிப்பவையாகவே காணப்பட்டன.

எது எவ்வாறெனினும் வலிந்து காணாமல் ஆக்கப்படல்களுடன் தொடர்புடைய கடத்தல்காரர்களை அடையாளங்காணமுடியும். ஆனால் 1989 ஒக்ரோபர் மாதத்திலிருந்து அதுபற்றி எவரேனும் விசாரணைகளை மேற் கொண்டனரா? குறிப்பாக 1989இல் காணாமல் போன நபரொருவர் பற்றிய தகவல்களில், அவர் தமது காவலின்கீழ் இருந்ததாக இராணுவத்தினர் (தலத்துஓயா இராணுவ முகாம்) கூறுகின்றனர். அவ்வாறெனில் அந்நபரை எவ்வித சாட்சியங்களு மின்றி காணாமலாக்கியது யார்? அக்காலப் பகுதியில் தலத்துஓயா இராணுவமுகாமின் பொறுப்பதிகாரி யாக செயற்பட்டவர் யார்? அதனைக் கண்டறிவது அத்தனை கடினமானதல்ல.

இதேபோன்று பிறிதொரு காணாமலாக்கப்படல் சம்பவம் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முறைப்பாட்டில், 1990ஆம் ஆண்டு பேராதனையில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவரைக் கைதுசெய்த பின்னர் காணவில்லை. (22ம் பக்கம் பார்க்க)

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# ஈழத்தமிழரையும் - ஈழ விடுதலையையும் நேசித்த மாமனிதரும் தே.மு.தி.க. தலைவரும் நடிகருமான விஜயகாந் விடை பெற்றார்

ஈழத்தமிழினத்தையும் ஈழ விடுதலையையும் நேசித்த மாமனிதரும் தே.மு.தி.க தலைவரும் நடிகருமான விஜயகாந் நேற்று 28 டிசம்பர் 2023 வியாழக்கிழமை உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார். உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

2005ஆம் ஆண்டில் தேமுதிக என்ற அரசியல் இயக்கத்தை தொடங்கி, தமிழக சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற உயர்ந்த நிலையை அடைந்தவர்.

விஜயகாந்த் மரணம் தொடர்பான தகவல்கள் வெளியான நிலையில், தொண்டர்களும், அவரது ரசிகர்களும் பெரும் சோகத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். அவரது உடல், சாலிகிராமத்தில் இருக்கும் அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அவரது இல்லத்தில் தேமுதிக கட்சிக் கொடி, அறைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டிருக்கிறது.

நடிகரும், தே.மு.தி.க தலைவருமான விஜயகாந்த் உடல் நலக்குறைவு காரணமாக வீட்டிலேயே ஓய்வில் இருந்தார். பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதையும் தவிர்த்து வந்தார். கடந்த மாதம் 18ம் தேதி சென்னையில் இருக்கும் தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்த் நீண்ட நாள் சிகிச்சைக்குப் பின்னர் குணமடைந்து வீடு திரும்பினார். பிறகு, தே.மு.தி.க தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் குறித்த அறிவிப்பு வெளியானது. அதன்படி கடந்த 14ம் திகதி நடந்த கட்சிப் பொதுக் குழுக் கூட்டத்தில் விஜயகாந்த் முன்னிலையில் அவரது மனைவி பிரேமலதா பொதுச் செயலாளராக அறிவிக்கப்பட்டார் . இந்த நிலையில், மீண்டும் உடல்நலக் குறைவால் விஜயகாந்த் மருத்துவமனையில்




அனுமதிக்கப்பட்டார். 27 டிசம்பர் 2023 புதன்கிழமை உடல்நிலை சீரற்ற நிலையில், மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட விஜயகாந்துக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப் பட்டது. ஏற்கெனவே நுரையீரல் தொற்று இருந்த நிலையில், அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருந்தது. அதனால் அவருக்கு வெண்டிலேட்டர் பொருத்தி தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்திருக்கிறார். கேப்டனின் மரணச் செய்தி திரையுலகையும் அவரது தொண்டர்களையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இன்று இறுதிக்கிரியைகள் நடைறெும்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# அசாதாரண நினைவாற்றலால் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த தமிழ் சிறுவன்

2023ஆம் ஆண்டில் உலகின் தனித்துவமான நினைவாற்றல் கொண்ட மாணவராக புகழ்பெற்ற சோழன் உலக சாதனை புத்தகத்தில் (CBWR) இடம்பிடித்ததன் மூலம் இலங்கை சிறுவன் ஒருவன் தனது தாய்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளான்.

பாக்யராசா முரளிதரம் என்ற இந்தச் சிறுவன், பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயத்தில் 4ஆம் தரத்தில் கல்வி கற்கும் ஒன்பது வயது பல குறைபாடுகள் கொண்ட (ஆட்டிசம்) மாணவன் ஆவான். இந்தியாவில் தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட சோழன் உலக சாதனை புத்தகத்தில் இந்த நிலை குழந்தை ஒன்று இடம் பெறுவது இதுவே முதல் முறை என்று சோழன் அமைப்பாளர்கள் கூறுகின்றனர்.



உலக வரைபடத்தில் உள்ள நாணயங்கள், ஆட்சியாளர்களின் பெயர்கள், தலைநகரங்கள், மொழிகள், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தொடர்பு கொள்ளும் திறன் போன்ற பகுதிகள் பற்றிய இந்த மாணவனின் இளம் வயதிலேயே அசாதாரண அறிவு மற்றும் நினைவாற்றலை மதிப்பீடு செய்வதன் மூலம் அந்த மொழிகளிலும், சர்வதேச பொது அறிவிலும் சோழன் அமைப்பாளர்கள் இந்த மாணவரை உலக சாதனை புத்தகத்தில் சேர்த்துள்ளனர்.

இந்த மதிப்பீட்டின் நோக்கம் ஆட்டிசம் குழந்தைகளைப் பற்றி பெற்றோருக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகும். இந்த மாணவனை சோழன் உலக சாதனை புத்தகத்தில் சேர்ப்பதற்கான பரீட்சை பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# ஊழல்வாதிகளை பாதுகாக்கும் அரசிடமிருந்து நாடு விடுதலை பெறும் காலம் வெகுதொலைவில் - பேராயர்



உயர் நீதிமன்றத்தின் ஆணையை துளியளவும் கவனத்தில் கொள்ளாத போக்கே இன்று எம்நாட்டில் காணப்படுகிறது. ஊழல்வாதிகளை பாதுகாக்கும் அரசாங்கமே எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதால், இந்நாடு அதிலிருந்து விடுதலை பெறும் காலம் வெகு தொலைவில் உள்ளதாக பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பிரதான நள்ளிரவு ஆராதனை கட்டான ஹல்பே புனித பிரான்ஸிஸ் சேவியர் தேவாலயத்தில் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம் பெற்றது. இதன் போது ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பேராயர்,

இலங்கையில் ஒருவேளை உணவைக் கூட சரியாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் 8 மில்லியன் மக்கள் காணப்படுவதாக சில மாதங்களுக்கு முன்னர் தெரிய வந்தது.

அந்த எண்ணிக்கை தற்போது இரு மடங்காகியிருக்கக் கூடும். எதிர்கால கனவுகள் அனைத்தும் சிதைந்து போன நிலையிலேயே நாட்டிலுள்ள பலரும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவற்றுக்கு மத்தியில் வரிசுமைய அதிகரித்து பொருட்களின் விலைகளும் அதிகரித்து, தொழில்களை இழந்து, பிள்ளைகளின் பசியைப் போக்க முடியாத பலரும் இன்று இந்த நாட்டில் உள்ளனர்.

இவ்வாறான நிலையிலும் உலகில் ஊழல் மோசடிகள் அதிகம் காணப்படும் நாடுகள் பட்டியலில் இலங்கை உயர்ந்த இடத்தில் காணப்படுகின்றமை உண்மையில் கவலைக்குரியதாகும். உயர் நீதிமன்றத்தின் ஆணையை துளியளவும் கூட கவனத்தில் கொள்ளாத, நீதியும் நியாயமும் அற்ற நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. அதிகார மோகத்திலுள்ளவர்களாலேயே நாடு ஆட்சி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறானவர்களால் இம்முறை நத்தார் பண்டிகையில் வறுமையிலுள்ளவர்களுக்கு கை கொடுப்பதற்கானதாக அமைந்துள்ளதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே இல்லாதோருக்கும் வறியவருக்கும் தம்மால் இயன்ற உதவிகளை வழங்குமாறு சகல கத்தோலிக்க மற்றும் கத்தோலிக்கமல்லாத மக்களிடமும் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# ஐரோப்பிய சதுரங்கப் போட்டியில் தமிழ்ச் சிறுமி போதனா சிவானந்தன் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு



எமது தமிழ் பூர்வீகம் கொண்ட எட்டு வயது போதனா சிவானந்தன் ஐரோப்பிய ரீதியிலான சதுரங்க ( Chess)போட்டியில் (European chess tournament) சிறந்த பெண் வீராங்கனை (Best female player)எனும் முடிசூடி மதிப்பளிக்கப் பட்டுள்ளார் .

ஐரோப்பாவின் குரோஷியா ( Croatia) நாட்டில் சென்ற வாரம் இடம் பெற்ற இந்த போட்டியில் உலக தர வரிசையில் முன்னணியில் இருக்கும் பிரபல சதுரங்க( Chess) விளையாட்டு வீரர்கள் உட்பட 555 பேர் கலந்து கொண்டனர் .

இதில் இங்கிலாந்தில் இருந்து எமது தமிழ் பூர்வீகம் கொண்ட 8வயது போதனா சிவானந்தன் (Bodhana Sivanandan) நெற்றியில் திருநீறு அணிந்த அழகுடன் கலந்து கொண்டார்.

தன்னைவிட 30 வயதிற்கு மேல் மூத்த உலக வீரர்களை குறித்த நிமிடத்திற்குள் போட்டி விதிமுறையின் கீழ் விளையாடி புள்ளிகளை பெற்று கொண்டார்.

மிக அதிகமான மதிப்பு புள்ளிகளை பெற்று 555 பேருடன் போட்டியிட்டு முன்னேறி சிறந்த சதுரங்க பெண் வீராங்கனை எனும் விருதை பெற்று முடிசூடினார் .

5 வயதில் இந்த சதுரங்க விளையாட்டில் பொழுது போக்காக விளையாட ஆரம்பித்ததாக அவரது தந்தை பெருமையுடன் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் 20 இளைஞர்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம்

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் விசேட நடவடிக்கை காரணமாக கைதான 20 இளைஞர்களை மறுவாழ்வு மையத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

யாழ்ப்பாணத்தில் போதைக்கு எதிராக பொலிஸாரினால் கடந்த சில தினங்களாக முன்னெடுப்பட்டு வரும் விசேட நடவடிக்கையின்போது போதைப்பொருளை கடத்தியமை உடைமையில் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 100 கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 பேரும் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 04 பேரும் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 30 பேரும் மற்றும் போதை மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறு கைதானவர்களில் 20 பேர் போதைக்கு அடிமையானவர்கள் என பொலிஸ் விசாரணைகளின் போது கண்டறிந்துள்ளோம். அவர்களை நீதிமன்றில் முற்படுத்தி நீதிமன்றம் ஊடாக போதை மறுவாழ்வு மையத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம் என தெரிவித்தார்.

# என் மீது மக்கள் அதிருப்தி!



மக்கள் என் மீது அதிருப்தி கொண்டுள்ளனர் என்பது தமக்கு தெரியும் என பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். கடந்த தேர்தல்களின் போது தமக்கு ஆதரவு வழங்கிய அதே இளம் தலைமுறையினர் அதிருப்தி கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2015ம் ஆண்டில் பெரும்பான்மை அரசாங்கத்தை நிறுவுவதற்கு உதவியவர்களே இன்று எதிர்ப்பை வெளியிடுவதாகத் தெரிவித்துள்ளார். இளம் தலைமுறையினர் எட்டு ஆண்டுகளின் வாடகை செலுத்துவதற்கு முடியாத நிலையில் வாழ்வதாகக் குறிப்பிடப்படுகின்றது. வாக்குறுதி அளித்து மக்களை தாம் ஏமாற்றியதில்லை என அவர் சுடுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை கருத்துக் கணிப்பு ஒன்றில் பங்கேற்ற 70 வீதமானவர்கள் ட்ரூடோ பதவி விலக வேண்டுமென கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க அண்மையில் திருமண பந்தத்திலிருந்து பிரிந்த மனைவி மற்றும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுடன் கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ விடுமுறையை கழிப்பதற்காக ஜமெய்க்கா விஜயம் செய்துள்ளார்.

முன்னாள் மனைவி சோபி கிரகரி ட்ரூ மற்றும் பிள்ளைகளுடன் 26ம்திகதி முதல் ஜனவரி மாதம் (22ம் பக்கம் பார்க்க)

படைத்திறம் மிக்க இனக்குழு தன்னை விட நாகரிகத்தில் உயர்ந்த இனக்குழுவை வெற்றி கொண்டாலும், நாளடைவில் தோற்ற இனத்தின் நாகரிகம் வென்றவர்களை வெற்றி கொள்ளும்''

\- ஃபிரடெரிக்ஜீஎங்கெல்ஸ்

# ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக தமிழர் இன்னும் தீர்மானம் இல்லை என்கிறார் சம்பந்தர்

ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பது? அல்லது தமிழ்க் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளரைக் களமிறக்குவதா? அல்லது ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்காமல் தேர்தலைப் புறக்கணிப்பதா? என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. அது தொடர்பில் இன்னமும் நாம் யோசிக்கவும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஒரு சில தமிழ்க் கட்சிகள் அவசரப்பட்டு தீர்மானம் எடுப்பதுபோல் நாம் தீர்மானம் எதனையும் எடுக்க முடியாது.

தமிழ் மக்கள் பக்கம் நின்றே நாம் தீர்க்கமான முடிவு எடுப்போம். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலோ, அதன் வேட்பாளர் தொடர்பிலோ நாம் அவசரப்படமாட்டோம். முதலில் உத்தியோகபூர்வ தேர்தல் அறிவிப்பு வரட்டும். அதன் பின்னர் அது பற்றி யோசிப்பம் என்றார்.

அதேவேளை இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் பின்வருமாறு கூறினார்:

தமிழ்த்தேசிய விடுதலையை இலக்காகக்கொண்ட



சமஷ்டி முறைமையிலான தீர்வை முன்னிறுத்தக் கூடியவகையில் தமிழ்த்தேசியம் சார்ந்த ஒருவரைப் பொது வேட்பாளராகக் களமிறக்கலாம். தமிழ் வேட்பாளரொருவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்புக்கள் மிகக்குறைவு எனினும், இதன் மூலம் தமிழர்களின் அபிலாஷைகளை உள்ளடக்கிய கனதியான செய்தியை வெளிப்படுத்த முடியும். அதேபோன்று விரும்பினால் இரண்டாவது விருப்பு வாக்கை பெரும்பான்மையின வேட்பாளருக்கு வழங்கலாம். தமிழ்மக்களின் எண்ணத்தை வெளிப்படுத்தும் களமாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலைப் பயன்படுத்தலாம் என்பதே எனது அபிப்பிராயம் என்றார்.

# தமிழ்மக்களுக்கு உண்மைகளைச் சொல்வது அவசியம்

ரணில் விக்கிரமசிங்க சிங்கள மக்களுக்கு உண்மையை சொல்ல வேண்டும் என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார். அவர் கூறுவதைப் போன்று ரணில் சிங்கள மக்களிடம் தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை கூறத்தான் வேண்டும் – அது அவரின் கடமை. ரணில் மட்டுமல்ல நாட்டை அபிவிருத்திப் பாதையில் கட்டியெழுப்ப வேண்டும் என்று அக்கறைப்படும் அனைத்துத் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் தங்களுக்கு வாக்களிக்கும் சிங்கள மக்களுக்கு உண்மையான நிலைமைகளை எடுத்துக்கூற முன் வர வேண்டும் மக்களை தொடர்ந்தும் உளுத்துப் போன இனவாதச் சிந்தனைகளுக்குள் தள்ளி விடக்கூடாது. அந்த வகையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைக்கும் வாதத்தில் நியாயம் உண்டு.

ஆனால் தமிழ் மக்களுக்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டுமல்ல, ஏனைய தமிழ்த் தேசியவாத அரசியல் கட்சிகளின் தலைவர்களும் உண்மைகளைக் கூறுகின்றார்களா என்னும் கேள்விக்கான பதிலையும் நாம் தேட வேண்டியிருக்கின்றது. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழ் மக்களுக்கான அரசியல் பாதையிலிருந்து விலகிச் செல்கின்றார் என்று கூறியே, எஸ். ஜே. வி. செல்வநாயகம் இலங்கை தமிழரசுகட்சியை உருவாக்கினார். அன்றிலிருந்து இன்றுவரையில் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றையே அனைத்துத் தமிழ் தேசிய கட்சிகளும் முன் வைத்து வருகின்றன.

அதிலும், வடக்கு – கிழக்கு இணைந்த சமஷ்டி தீர்வு. ஆனால், அவ்வாறான தீர்வு தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரிப்பதாக இருக்க வேண்டும் என்று கஜேந்திரகுமாரின் புதிய அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கூறுகின்றது. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான காங்கிரஸ் அவ்வாறானதொரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் காலம் இந்த அரசியல் போக்கில் ஒரு விதிவிலக்கு. அது தனிநாட்டுக்கான அரசியல் இயக்கம். யுத்தம் முடிவுற்ற பின்னணியில் மீண்டும் தமிழ்த் தேசிய கட்சிகள் சமஷ்டியை உச்சரித்துக் கொண்டன. ஆனால், சமஷ்டி செல்வநாயகம் காலத்திலேயே தோல்வியுற்ற ஒரு வாதம். அந்தக் கோரிக்கை தோல்வியுற்றமையால் தான் செல்வநாயகம் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்தார். ஆனால் அதனை அடையும் வழிமுறையை அவர் அறிந்திருக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் மிதவாதிகளின் தோல்வி பின்னர் ஆயுத விடுதலை இயக்கங்களின் (விடுதலைப்புலிகள் தவிர்ந்த) தோல்வியின் பின்னணியில் இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதன் மூலம் மாகாண சபை மூலமான தீர்வு கிடைத்தது.

விடுதலைப் புலிகளின் தோல்வி அதுவரையான அனைத்து நகர்வுகளையும் நம்பிக்கைகளையும் செல்லாக் காசாக்கியது. மாகாண சபை முறைமையிலிருந்து – அதாவது, 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து பயணம் செய்ய வேண்டிய அரசியல் சூழலே யதார்த்தமானது. ஆனால், இந்த யதார்த்தத்தை எத்தனை தமிழ்த் தேசிய கட்சிகள் தமிழ்மக்களிடம் நேர்மையாக முன்வைத்திருக்கின்றன?

மக்களுக்கு உண்மையைக் கூறி வாக்குகளை கேட்கின்றன? தமிழ்த் தேசிய கட்சிகள் தமிழ் மக்களின் நலன்கள்மீது உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்தால் மக்களுக்கு உண்மைகளைக் கூற முன்வர வேண்டும். இன்றுள்ள அரசியல் சவால்களை நேர்மையாகக் கூற வேண்டும். இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும்.

# ஜனாதிபதித் தேர்தல்:- தமிழ்மக்கள் விழிப்புடன் கனதியான செய்தியைத் தெரிவிக்க வேண்டும்



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் சார்பில் பொது வேட்பாளரொருவரைக் களமிறக்குவது குறித்து தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மாறுபட்ட நிலைப்பாடுகளை வெளியிட்டுள்ளனர். இருப்பினும் அத்தேர்தலை கனதியானதொரு செய்தியைக் கூறுவதற்கான களமாகத் தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ்மக்களுக்கு அளிக்கும் உறுதிமொழிகளும், டெல்லிக்கு வழங்கும் வாக்குறுதிகளும் அடுத்த கணமே காற்றில் பறக்கவிடப்படுவதாகவும், எனவே சிங்கள அரசியல் தலைமைகளின் அசமந்தப்போக்கைச் சுட்டிக் காட்டக் கூடியவாறு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் பொது வேட்பாளரொருவரை நிறுத்தி அவருக்கு வாக்களிக்க வேண்டியது அவசியம் எனவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ்த்தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமசந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் சார்பில் பொது வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு தனது பெயரை முன்மொழிந்தால், அப்போதையகள நிலைவரங்களை அடிப்படையாகக்கொண்டு அதனைப் பரிசீலனை செய்வதற்குத் தயாராக இருப்பதாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளரொருவரைக் களமிறக்கவேண்டியது அவசியமா? ஆமெனில், அதற்குப் பொருத்தமான நபர் யார்? போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அதன்படி இதுபற்றிக் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியதாவது: தமிழ்மக்கள் தமது எதிர்ப்பைக் காண்பிக்கும் வகையில் இரண்டாம் விருப்பத் தெரிவின்றி, தமிழ் வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களித்தால் தான் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளரொருவரைக் களமிறக்குவதில் பயனிருக்கும். ஆனால் விக்கினேஸ்வரனோ அல்லது எம்மைத் தவிர்த்த வேறு எந்தவொரு தரப்பினரோ தமிழ்மக்களை ஏமாற்றி, அவர்களைத் தமக்கு வேண்டிய நபருக்கு வாக்களிக்கச் செய்யும் வகையிலான உத்தியாகவே இதனைப் பயன்படுத்திக்கொள்வர்.

ஏனெனில் குறித்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் இரண்டாவது விருப்பு வாக்கை யாருக்கும் அளிக்கக்கூடாது என அவர்கள் உறுதியாகக் கூறமாட்டார்கள். ஆகவே பொது வேட்பாளரை நிறுத்துவதால் எதிர்பார்க்கப்படும் உரிய பலனைப் பெறமுடியாது.

ஆனால் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 14 வருடங்கள் கடந்தும் தமிழர்களுக்கு எதிரான இனவழிப்பு தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் வலுவானதொரு செய்தியைக் கூறியேயாக வேண்டும். எனவே அத்தேர்தலில் தமிழர்கள் அனைவரும் வாக்களிக்காமல் முற்றுமுழுதாக ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்றார்.




சென்னையைத் தளமாக கொண்டு இயங்கி வரும் TAMIZHAGAM INTERNATIONAL FILM FESTIVAL INDIA தமிழன் வழிகாட்டி செந்தி வழங்கிய செந்தீ குறும் திரைப் படத்திற்கு 24 டிசம்பர் 2023ல் விருது வழங்கி கௌரவித்துள்ளது.

ஈழத்து கலைஞர்களுக்கு கிடைத்த மற்றுமோர் அங்கீகாரமாக இதனை கருதலாம். செந்தீ திரைப் படத்தினை Tamilsguide senthi யூட்டியூப் (You tube) தளத்தில் பார்வையிடலாம்.

# தமிழர்கள் ஏற்கும் இறுதித் தீர்வை வழங்க அழுத்தம் கொடுங்கள் புதிய இந்தியத் தூதுவரிடம் கஜேந்திரகுமார் வேண்டுகோள்

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான ஏற்றுக் கொள்ளத்தக்க இறுதித்தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை என்ற உண்மையை இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டு சென்று, அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் சந்தோஷ் ஜா கடந்த வெள்ளிக்கிழமை (22) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தனது நற்சான்றுப் பத்திரத்தைக் கையளித்தார்.

அது மாத்திரமன்றி அங்கு கருத்து வெளியிட்ட அவர் இந்திய - இலங்கை வரலாற்று நட்பை மேலும் பலப்படுத்தவும், வர்த்தக, முதலீட்டு, வலுசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நிலவும் நெருங்கிய ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்ளவும் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்துக் கருத்துரைத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவரது பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு வாழ்த்துவதாகக் குறிப்பிட்டார்.

இருப்பினும் கடந்த காலத்தில் தமிழர் பிரச்சினைக்கு நிலையான இறுதித் தீர்வொன்றைக் கண்டடைவதை முன்னிறுத்தியே இரு நாடுகளுக்கும்



இடையில் இந்திய -இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது எனவும், அதில் இந்தியாவின் நலன்களும் தங்கியிருந்ததாகவும் தெரிவித்த அவர், இருப்பினும்



அவ்வொப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார். எனவே இந்த உண்மையை புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டு செல்ல வேண்டும் எனவும், அதனூடாக ஆகக்குறைந்தது தமிழர் பிரச்சினைக்கு அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவகையிலான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் எனவும் கஜேந்திரகுமார் மேலும் வலியுறுத்தினார்.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றி தமிழ் அரசியல்வாதிகளை பாவித்து அடுத்த தேர்தலின் வெற்றியை நோக்கி காய் நகர்த்தி வருவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், இதனை தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த காரணத்திற்காக தான், தங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையெனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக் காட்டியுள்ளார்.

## ஷங்ரிலாவில் மகிந்தாவுக்கு விருந்து வைத்த ரணில்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு விசேட இரவு விருந்தொன்றை ஷங்ரிலா ஹோட்டலில் வழங்கியுள்ளார். பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றிருந்த நிலையில் இவ்வாறு ஞாயிற்றுக் கிழமை இரகசிய சந்திப்பொன்று இருவருக்கும் இடையில் நடைபெற்றுள்ளது. இரவு விருந்துடன் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலகத்தின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் யோஷிதராஜபக்ஷ ஆகியோரைத் தவிர வேறு எவரும் கலந்து கொள்ள வில்லை. எதிர் காலத்தில் எவ்வாறு அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பது தொடர்பில் இங்கு நீண்ட கலந் துரையாடல் இடம் பெற்றுள்ளது. குறித்த இரவு விருந்திற்கு மறுநாள் திங்கட்கிழமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த வெளியிட்ட அறிவிப்பில் ஜனாதி பதிக்கு ஆதரவாக சில கருத்துக்களை வெளியிட்டிருந்தமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 10 அமைச்சுகளுக்கு செயலாளர்களையும் இரண்டு மாகாணங்களுக்கு பிரதம செயலாளர்கள் இருவரையும் நியமித்துள்ளார். இந்த நியமனங்கள் வழங்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த நியமனங்கள் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

கல்வி அமைச்சின் புதிய செயலாளராக வசந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் புதிய செயலாளராக என்.எம்.ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சின் புதிய செயலாளராக குணதாச சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் புதிய செயலாளராக ஏ. சி. முஹம்மது நஃபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்
Math & Physics Tutoring
(For High School Students)

Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிக் கும்பல்களுடன் மதத் தலைவர்கள் தொடர்புகளை வைத்துள்ளார்கள்?

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி கும்பலுடன் தொடர்புகளைப் பேணிவரும் சில மதத் தலைவர்கள் கூட குற்றவாளிகள் மீதான பொலிஸாரின் அடக்கு முறையை விமர்சிக்கும் வகையில் பாசாங்குத்தனத்துடன் செயல்படுவதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் கூறினார்.



ஹோமாகமவில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், பொலிஸாரின் மன உறுதியைக் குலைக்கும் வகையில் அரசியல்வாதிகளும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இது பொலிஸ் துறையின் நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை திசை திருப்புவதற்காகவே . எமது தனிப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உட்பட பல்வேறு சவால்களை இந்த செயற்பாட்டில் நாம் எதிர்கொள்கிறோம். அனைத்து முரண்பாடுகளுக்கும் எதிராக இந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நான் ஒரு அமைச்சராக தீர்மானித்துள்ளேன் அதற்குத் தேவையான தைரியத்தை ஜனாதிபதி எனக்குத் தருகிறார். பொலிஸாரின் மன உறுதியை அதிகரிக்க, சம்பந்தப்பட்ட அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் கூறினார். முன்னாள் ஜனாதிபதி இந்த பொறுப்பை முதலில் பொறுப்பேற்க விரும்பாத போதிலும் தமக்கு இந்த பொறுப்பை வழங்கியதாக அவர் கூறினார்.

# பிரான்ஸில் சட்டவிரோதமாக குடியேறிய இலங்கையர்கள் நாடுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்



சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக பிரான்சுக்கு குடிபெயர்ந்த இலங்கை பிரஜைகள் குழுவை பிரான்சில் உள்ள ரீயூனியன் தீவு அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் ரீயூனியன் தீவிற்கு குடிபெயர்ந்த பல இலங்கையர்கள் மீள்குடியேற்றப்பட்ட குழுவில் அங்கம் வகித்ததாக கடற்படை தெரிவித்துள்ளது. அவர்களில் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் திகதி IMUL-A-0813-KLT என்ற பல நாள் மீன்பிடி இழுவைக் கப்பலில் இடம் பெயர்ந்த ஏழு நபர்கள், ஓகஸ்ட் 22, 2022 அன்று IMUL-A-0469-NBO என்ற பல நாள் மீன்பிடி இழுவைக் கப்பலில் இருந்த இரு நபர்கள், 2018 இல் IMUL-A-0014-CBO என்ற பல நாள் மீன்பிடி இழுவை படகில் இருந்த மூன்று நபர்களும், 2019 இல் இந்தோனேசியாவிலிருந்து குடிபெயர்ந்த இரண்டு நபர்களும் உள்ளடங்குகின்றனர். கடந்த 22 ஆம் திகதி UU 0050 விமானத்தில் திருப்பி அனுப்பப்பட்டனர். பேருவளை, சிலாபம் மற்றும் கலவாஞ்சிகுடி பகுதியைச் சேர்ந்தவர்கள் 21 முதல் 60 வயதுடையவர்களாவர். குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மற்றும் பொலிஸார் இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

ரீயூனியன் தீவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்கும் நபர்களை பிரான்ஸ் அரசாங்கம் உடனடியாக திருப்பி அனுப்புவதாக இலங்கை கடற்படை வலியுறுத்தியுள்ளது. கடல் வழியாக மனித கடத்தல்காரர்களால் எளிதாக்கப்படும் சட்டவிரோத குடியேற்றங்களில் பங்கேற்பதையோ அல்லது ஆதரவளிப்பதையோ தவிர்க்குமாறு பொதுமக்களை கடற்படையினர் கேட்டுக்கொள்கிறார்கள்.

இதேவேளை துபாயில் இருந்து கடந்த வியாழக்கிழமை நிக்கரகுவா நாட்டிற்கு 303 இந்தியர்களுடன் பயணித்த விமானம் பிரான்ஸில் தரையிறக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். மத்திய அமெரிக்காவில் உள்ள நிக்கரகுவா நாட்டின் தலைநகர் மனகுவாவிற்கு விமானம் சென்று கொண்டிருந்தது. இதனிடையே துபாயில் இருந்து புறப்பட்ட விமானம் எரிபொருள் நிரப்புவதற்காகவும், தொழில் நுட்ப பிரச்சினைகள் உள்ளதா என்பதை சரி பார்ப்பதற்காகவும் செல்லும் வழியில் பிரான்ஸ் நாட்டின் வட்ரே நகர விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. அப்போது, விமான நிலையம் வந்த பிரான்ஸ் பொலிஸார், பயணிகளிடம் விசாரணை (22ம் பக்கம் பார்க்க)




# தமிழரசுக்கட்சிக்கான புதிய தலைமை

இலங்கை தமிழரசு கட்சிக்கான புதிய தலைவரை தெரிவு செய்வதற்கு மும்முனை போட்டி நிலவுகின்றது. இது தொடர்பில் பொதுவெளிகளிலும் பலவாறான கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன. தமிழரசு கட்சியின் கடந்த கால செயல்பாடுகளை விமர்சித்தவர்கள் கூட தலைமைத்துவ போட்டியில் ஈடுபாடு காட்டுவதை காண முடிகின்றது.

இதிலிருந்து ஒன்று தெளிவாகின்றது அதாவது தமிழரசு கட்சி தான் ஒரு பிரதான கட்சி என்பதை பலரும் ஏற்றுக் கொள்கின்றனர் இல்லாவிட்டால் இந்தளவு ஆர்வம் காண்பிக்கப்பட வேண்டியதில்லை ஏனெனில் இது ஒரு கட்சியின் உள் விவகாரம். யார் தங்களின் புதிய தலைவர் என்பதை அந்தக் கட்சியின் உறுப்பினர்களே தீர்மானிப்பர். இதில் வெளியிலிருப்பவர்கள் முட்டி மோத வேண்டிய தேவையில்லை. இவ்வாறானதொரு சூழலில் தமிழரசுகட்சிக்கான தலைமைத்துவ போட்டியை கைவிட்டு ஒரு கூட்டுத் தலைமையை ஏற்படுத்த வேண்டும் என்றவாறான கோரிக்கையொன்றும் கூட தற்போது தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராசாவிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

ஓர் அரசியல் கட்சிக்கு எங்குமே கூட்டுத் தலைமை இருப்பதில்லை. வேண்டுமானால், பல கட்சிகளின் கூட்டுக்கு அவ்வாறான தலைமை தொடர்பில் சிந்திக்க முடியும். ஒரு கட்சி கூட்டுத்தலைமை தொடர்பில் சிந்தித்தால் அதன் பொருள் அந்தக் கட்சியில் தலைமை தாங்குவதற்கான தகுதிநிலையில் எவருமே இல்லை என்பதுதான். அதேபோன்று, ஒரு கட்சிக்கு இணைத்தலைமை என்பதும் சாத்தியமற்ற ஒன்று.

ஒருவேளை கட்சிக்குள் நிலவும் போட்டியானது கட்சியை உடைத்து விடலாம் என்று அந்தக் கட்சியை சேர்ந்தவர்கள் உணர்ந்தால் அவ்வாறானதொரு பரிந்துரைக்கு செல்லலாம். ஒரு வேளை அப்படியானதொரு தீர்மானத்துக்கு தமிழரசு கட்சியினர் சென்றாலும் கூட அது அவர்களின் பலவீனத்தையே வெளிக்காட்டும். தமிழரசு கட்சியை பொறுத்தவரையில், தற்போதுள்ள தமிழ்த் தேசியகட்சிகள் மத்தியில் வடக்கு கிழக்கு தழுவிய வகையில் வாக்கு வங்கியை கொண்டிருக்கும் ஒரேயொரு கட்சியாகும்.

அதேவேளை, ஒப்பீட்டடிப்படையில் வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் கட்சி கட்டமைப்புகளை கொண்டிருக்கும் ஒரேயொரு கட்சியாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் இலங்கை தமிழரசு கட்சியின் தலைமை தொடர்பில் கரிசனைகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஒப்பீட்டடிப்படையில் கட்சிக்குள் பிளவுகளும் முரண்பாடுகளும் அதிகரித்திருக்கின்ற நிலையில் தான் தலைமைத்துவத்துக்கு மும்முனை போட்டி ஏற்பட்டிருக்கின்றது. மும்முனை என்று கூறினாலும் அடிப்படையில் இருவருக்கான போட்டியாகவே காணப்படுகின்றது. தமிழரசு கட்சிக்கான தலைவர் மாறுவதால், தமிழ்த் தேசிய அரசியலில் எந்தவோர் அதிசயமும் நிகழ்ந்து விடப் போவதில்லை.

தமிழ் தேசிய அரசியலை பொறுத்தவரையில் எந்தவொரு தனிநபரும் தமிழ் மக்களின் அரசியல் தலையெழுத்தை மாற்றி எழுதி விட முடியாது. ஏனெனில் தமிழரசு கட்சியோ அல்லது வேறு எந்தவொரு கட்சியிலோ எவர் தலைவராக இருப்பினும் பாராளுமன்ற வழிமுறையே அவர்களுக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவாகும். அதனைத் தவிர்த்து, ஜனநாயக எதிர்ப்பு அரசியலை உச்சளவில் முன்னெடுப்பதாயின், அதற்கான அரசியல் ஒழுக்கத்துடன் எந்தவொரு கட்சியும் இல்லை – நபர்களும் இல்லை. ஏனெனில் பாராளுமன்ற உறுப்புரிமையே அவர்களுக்கான அங்கீகாரமாகவும் அரசியல் முகமாகவும் இருக்கின்றது. பாராளுமன்ற அரசியலுடன் சமரசம் செய்து கொள்ளும் எந்தவொரு நபரும் அரச எதிர்ப்புப் போராட்டங்களில் முழுமையாக தங்களை ஈடுபடுத்தப் போவதில்லை

அது முடியாததும் கூட அவ்வப்போது சில அறிக்கைகளை வெளியிடுதல் இல்லாவிட்டால் ஒரு கடையடைப்புக்கான அழைப்பு அதற்கும் அப்பால் என்றால் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வகையான நடவடிக்கை ஒன்றை செய்ய முடியும். இந்தப் பின் புலத்தில் நோக்கினால் இலங்கை தமிழரசுகட்சியின் புதிய தலைவர் அதிசயங்களை நிகழ்த்தப் போவதில்லை. ஆனால் புதிதாகப் (22ம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்வு - பொறுப்புக்கூறல் குறித்து மாற்றமில்லை! உலகத்தமிழர் பேரவை சுரேன் சுரேந்திரன் தெரிவிப்பு!



பௌத்த தேரர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய கலந்துரையாடல் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தக்க வைத்துக் கொள்வது எமது நோக்கமல்ல என்று உலகத் தமிழர் பேரவையின் ஊடகப் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்தார். அத்துடன் அரசியல் தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்களில் உலகத்தமிழர் பேரவையின் கடந்த கால நிலைப்பாடுகளில் எவ்விதமான மாற்றங்களுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இமயமலைப் பிரகடனத்தின் அடுத்த கட்டமாக 25மாவட்டங்களிலும் சர்வமதக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டு ஜனவரி முதல் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளதோடு புலம்பெயர் தரப்பினருக்கும், பௌத்த தேரர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல்களும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த உலகத்தமிழர் பேரவையினர் இமயமலைப் பிரடகனத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பல்வேறு தரப்பினரிடத்திலும் கையளித்து விட்டு வெளியேறியுள்ளனர். அதனை அடுத்து அவர்கள் முன்னெடுக்கவுள்ள செயற்றிட்டங்கள் மற்றும் உலகத்தமிழர் பேரவையின் செயற்பாடுகள் தொடர்பில் மேலெழுந்துள்ள விமர்சனங்கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த நாம், சிறந்த இலங்கைக்கான சங்க மன்றத்தினருடன் இணைந்து ஜனாதிபதி, பௌத்த பீடாதிபதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தோம். இந்தக் கலந்துரையாடலின் போது இமயமலைப் பிரகடனத்தினை அனைவருக்கும் கையளித்திருந்தோம். குறிப்பாக, இந்த முயற்சியானது இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தை அல்ல. மாறாக அப்பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கு காணப்படுகின்ற எதிர்ப்புக்களை களைவதாகும்.

விசேடமாக பௌத்த தேரர்கள் தமிழர்களின் விடயங்கள் தொடர்பிலான முன்னெடுப்புக்களை எதிர்க்கின்றார்கள் என்ற நிலைமைகள் தீவிரமாக காணப்படுகின்ற நிலையில், அவர்கள் ஊடாக தேசிய கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதே எமது நோக்கமாகும். இந்தக் கலந்துரையாடலின் அடிப்படையில் எதிர்மறையான நிலைப்பாட்டில் உள்ள பெரும்பான்மையானவர்களின் நிலைப்பாடுகளை மாற்றியமைத்து அவர்களின் சந்தேகங்களை களைந்து தேசிய நல்லுறவொன்றை உருவாக்குவதே நோக்கமாகும்.

அதே போன்று இலங்கையில் உள்ள பௌத்த பீடங்களில் அங்கத்துவத்தைக் கொண்டிருக்கின்ற தேரர்கள் குழுவினை விரைவில் வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் பொது மக்களுடன் திறந்தவெளி கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளோம். உள்நாட்டில் தேரர்கள் மற்றும் ஏனைய சமயத்தலைவர்களையும் உள்ளடக்கிய சர்வ மதக்குழுவினை மாவட்டங்கள் தோறும் ஸ்தாபித்து தேசிய கலந்துரையாடல் செயற்பாட்டை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளோம்.

இதேநேரம், அரசியல் தீர்வு தொடர்பான விடயத்தினை உள்நாட்டில் உள்ள அரசியல் தலைவர்களே கையாள்வார்கள். பெரும்பான்மையானவர்கள் அந்த முயற்சிக்கு தடையாக இருக்கும் நிலைப்பாட்டினை மாற்றியமைப்பதே எமது கலந்துரையாடலின் நோக்கமாகும்.

இதேவேளை, நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவை தக்க வைத்துக் கொள்வதற்காக செயற்படுவதாகவும், எமக்கு யார் இனப்பிரச்சினை தொடர்பில் பேசுவதற்கான அங்கீகாரத்தினை அளிப்பது தொடர்பிலும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. எம்மைப் பொறுத்தவரையில் இந்த விமர்சனங்கள் தேவையற்றவை.

அத்துடன் அவை புரிதலற்ற வகையில் முன்வைக்கப்படுபவை. நாம் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்காக இலங்கைக்கு வருகை தரவில்லை. தேரர்களுடன் இணைந்த செயற்பாட்டை நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதிக்கும், ஏனை அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், பௌத்த பீடாதிபதிக்களுக்கும், சிவில் அமைப்பினருக்கும் தெரியப்படுத்தவே முனைந்தோம்.

அதேநேரம், உலகத்தமிழர் பேரவையைப் பொறுத்த வரையில் இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை முக்கிய மான இருவேறு விடயங்கள். அந்த விடயங்களில் எமது நிலைப்பாடுகளில் மாற்றமில்லை. விசேடமாக பொறுப்புக் கூறல் விடயத்தில் மனிதாபிமான மற்றும மனித உரிமைகள் சட்ட மீறல்கள் சம்பந்தமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்பதில் உறுதியாகவே உள்ளோம் என்றார்.

# மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை



மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் தேவை என முன்னாள் தேர்தல் ஆணையாளரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் மற்றும் பீபிள்ஸ் பவுண்டேசன் ஆகிய இரு நிறுவனங்கள் இணைந்து எமது உரிமைகள், எமது வளங்களை பாதுகாக்க எமது மாகாணத்தின் மாகாண சபையை வலுப்படுத்துவோம் என்ற தொனிப்பொருளிலான செயலமர்வொன்று கண்டி வரையறுக்கப்பட்ட கூட்டுறவு அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக நாடு என்ற அடிப்படையில் மாகாண சபை அவசியம். மாகாண சபை இந்நாட்டுக்கு அவசியமில்லை என யாராவது குறிப்பிடுவார்களாயின் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை தேவையும் இல்லை.

தற்போது மாகாண சபை மக்கள் கூட்டிணைப்பற்ற அரச அதிகாரிகளால் செயற்படுத்தப்படுகின்றது. இதனால் மாகாண சபை குறித்தான கேள்வியொன்றை எழுப்பும் போது அரச அதிகாரிகள் அதற்கு நேரடியாக பொறுப்பேற்காமல் இருக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இந்நிலை மாற்றமடைந்திருக்கும்

தற்போது மாகாண சபை செயற்திட்டங்களில் மக்கள் கருத்துக்களை கேட்டறிய வாய்ப்பு இல்லை. எனவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை தெரிவு செய்தலை உடன் மேற்கொள்ள வேண்டும். அநேகமானோர் மாகாண சபை வெள்ளை யானை என தெரிவித்து வருவதுடன், மாகாண சபை உறுப்பினர்களை பராமரிக்க அதிக நிதி வீண்டிக்கப்படுவதாக கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்களின் பராமரிப்புக்கு அரச வருமானத்தில் 1வீதமளவே செலவாகுகின்றது எனவும் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ஜயலத் பண்டார, முன்னாள் ராஜா உஸ்வெட கெய்யாவ, ஜனநாயக இளைஞர் காங்கிரசின் தலைவர் கே.அர்ஜஜீன, பீபிள்ஸ் பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் எரிக் ஹேரத் உள்ளிட்ட கண்டி மாவட்டத்தின் சிவிலமைப்புக்கள் உட்பட இளைஞர் யுவதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# யாழ்.மாவட்டத்தில் 10 பேர் வரை கைது!

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் விசேட நடவடிக்கை காரணமாக கைதான 20 இளைஞர்களை மறுவாழ்வு மையத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் போதைக்கு எதிராக பொலிஸாரினால் கடந்த சில தினங்களாக முன்னெடுப்பட்டு வரும் விசேட நடவடிக்கையின்போது போதைப்பொருளை கடத்தியமை உடைமையில் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 100கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 பேரும் ஐஸ்போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 04 பேரும் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 30 பேரும் மற்றும் போதை மாத்திரைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 27 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களில் 20 பேர் போதைக்கு அடிமையானவர்கள் என பொலிஸ் விசாரணைகளின் போது கண்டறிந்துள்ளோம்.

# 5வது ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி திருவானந்தநாயகி தவராஜா

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி திருவானந்தநாயகி (சாரதா) தவராஜா அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 28 டிசம்பர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி திருவானந்தநாயகி தவராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# இந்தியாவை நம்ப வைத்து தமிழரை எத்தி விளையாடும் ரணிலின் அடுத்த “ரவுண்ட்”

**கட்டுரையாளர்:**
**கனடாவில் இருந்து**
**– பனங்காட்டான் –**

வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்திக்கிறார் என்ற தகவல் வெளி வந்த போது, முன்னைய நாட்களைப் போன்று இம்முறை பலரும் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இதற்கான பிரதான காரணம் கடந்த ஒன்றரை வருடத்தில் உறுதியளித்த எதனையும் ரணில் செய்யாததே. அதற்காக அவர் அழைக்கும் போது செல்லாது விடக்கூடாது என்று தமிழ் தேசியம் சார்ந்த நான்கு பேருக்காவது மனம் இரங்கியது அரசியலில் பெரும் விடயம்.

அந்த நான்கு பேரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். இரா.சம்பந்தன், இராசமாணிக்கம் சாணக்கியன், கலையரசன், கோவிந்தன் கருணாகரன். இவர்களுள் முதல் மூவரும் தமிழரசுக் கட்சியினர். நான்காமவர் புதிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் ரெலோவைச் சேர்ந்தவர்.

வன்னி மாவட்ட எம்.பியான ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்த திலீபன் கலந்து கொண்டார். வடக்கிலிருந்து வேறெந்த எம்.பிக்களும் பங்கேற்காததுக்கான காரணம் இதுவரை வெளிவரவில்லை. காரணத்தை எவரும் கேட்கவுமில்லை. முக்கியமாக தமிழரசுத் தலைமைக்குப் போட்டியிடும் சிறீதரனும் சுமந்திரனும் இச்சந்திப்பை தவிர்த்துக் கொண்டதற்கு நிச்சயமாக காரணமிருக்கலாம்.

ரணில் என்ற குதிரையில் இறுதியாக ஏறி சறுக்கி விழுந்த சக்கடத்தார் சி.வி. விக்னேஸ்வரன். அந்த நோவு இன்னும் மாறாத நியைில், ரணில் ஒரு ஏமாற்றுக்காரர் என்று கூறி அவரது அழைப்பை நிராகரித்து விட்டார். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமாரும் கஜேந்திரனும் சந்திப்பை மறுத்து அறிக்கை விட்டனர். வடக்கைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரெலோ மற்றும் புளொட் பிரதிநிதிகளும் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

இம்முறை சம்பந்தன் சென்று ரணிலுடன் மோதிக் கொள்ளட்டும் என்று எல்லோரும் எண்ணினார்களோ என்னவோ தெரியாது. மறுதரப்பில் அரசாங்கத்தை ஆதரித்து வரும் வடக்கு கிழக்கைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், வியாழேந்திரன், பிள்ளையான் எனும் சிவநேசதுரை ஆகியோர் எதற்காக இக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்பது அவர்களுக்குத் தான் தெரியும்.

கடந்த பெப்ரவரியில் இடம் பெற்ற இலங்கையின் சுதந்திர தின விழாவுக்கு முன்னர் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுமென தமிழர் தரப்புக்கு உறுதியளித்த ரணில், அடுத்த சுதந்திர தின விழாவுக்கு இன்னும் ஆறு வாரங்கள் இருக்கும் வேளையில் இச்சந்திப்பை நடத்தியுள்ளார். அடுத்த சுதந்திர தின விழாவுக்கு முன்னர் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுமென்று இச்சந்திப்பில் கூறாதது நல்ல காரியம்.

ஆனால், அடுத்த நாடாளுமன்றத்தில் தீர்வு காணப்படுமென்ற போக்கில் சிலவற்றை இங்கு கூறியுள்ளார். அதில் முக்கியமான ஒன்று, 13ம் அரசியல் திருத்த சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக அவர் கூறியது. (இதற்கான முக்கிய காரணத்தை இப்பத்தியின் இறுதிப் பந்தியில் பார்க்கலாம்).

இச்சந்தர்ப்பத்தில், இதே 13ம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கடந்த ஆகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றும் போது அவர் சுட்டிய முக்கியமான பகுதி பின்வருமாறு அமைந்திருந்தது:

நாட்டின் எதிர்கால நன்மைக்காக அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை கூட்டாக முன்னெடுப்போம். நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக மாகாண சபை தேர்தல் சட்டத்திருத்தம் அமுல்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் செயற்படும் வரை மாகாண ஆளுனர்களுக்கு ஆலோசனைக் சபை வழிகாட்டல்களை வழங்கும். தற்போதுள்ள மாகாண சபை முறைமைக்குள் விரைவான அபிவிருத்தியை அடைவது சாத்தியமற்றதாகத் தெரிகிறது முன்னுக்குப் பின் முரணாக ரணில் தெரிவித்த கருத்துகளை இங்கு அவதானிக்கலாம்.

ஆகஸ்ட் மாத உரையில் அவர் மேலும் குறிப்பிட்டது, மாகாண சபைகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப் போவதாக. உரையை நிறைவு செய்கையில் உத்தேச அரசியலமைப்பை கவனமாக பரிசீலிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இங்கு சொல்லப்பட்ட எதுவுமே இது வரை அவரால் நடைமுறைப்படுத்தப்



படாத விடயங்கள் என்பது கவனிக்கப்பட வேண்டியது.

இதே உரையின் இன்னொரு பகுதி ரணிலின் உள்முகத்தை அம்பலப்படுத்துகிறது. அது பின்வருமாறு: ‘நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர்காலத்துக்கும் பொருத்தமான வகையில் 13வது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டியது அவசியம். தேசிய பிரச்சனையைத் தீர்ப்பது என்ற பெயரில் மாகாண சபைகளைக் கொண்டிருப்பது பற்றிய விவாதம் சுமார் தசாப்தங்களுக்கு முன்னர் முன்மொழியப்பட்டு எம்மீது திணிக்கப்பட்டதிலிருந்து விவாதிக்கப்பட்டு வருகிறது’ என்பது.

அதாவது, மாகாண சபை முறைமை என்பது 1987ல் (மூன்று தசாப்தங்களுக்கு முன்னர்) முன்மொழியப்பட்டு (இந்தியாவால்) எம்மீது (இலங்கையின் மீது) திணிக்கப்பட்டது என்ற வாசகம் ரணிலின் உள்மனதிலிருந்து வந்தது. 13ம் திருத்தத்தின் வழியாக வந்த மாகாண சபை முறைமையை தாங்கள் விரும்பவில்லையென்றும், தங்கள் மீது திணிக்கப்பட்டது என்றும் பகிரங்கமாகக் கூறுபவர், 13ம் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்து பிரதேச செயலகங்களை மாகாண சபைக்குள் கொண்டு வரவிருப்பதாகக் கூறுவதை எவ்வாறு நம்ப முடியும்?

மாகாண சபைகள் இலங்கை மீது திணிக்கப்பட்டது எனும் வாதம் சிங்களத்தின் குரலாகவே பார்க்கப்பட வேண்டியது. தேர்தல்களை சந்திக்கவிருக்கும் நேரத்தில் சிங்கள தேச வாக்குகளை நோக்கி இந்த வாக்கியம் வீசப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள நாடாளுமன்றத்துக்கு போதிய அதிகாரங்கள் இல்லையென்று காரணங்கள் கூறுபவர், அடுத்து வரும் நாடாளுமன்றத்தில் பிரச்சனைத் தீர்வுகளை கையாள முடியுமென்று தமிழர் பிரதிநிதிகளுக்கு நம்பிக்கையூட்டியிருப்பது விசித்திரமானது.

அடுத்த தேர்தலின் பின்னர் வரும் புதிய நாடாளுமன்றம் அதன் ஒரு வருடத்துக்குள் அதிகாரங்களைப் பகிரும் என்று இச்சந்திப்பில் ரணில் கூறியிருப்பது எந்த வகையிலும் நம்பகத்தன்மையற்றது. நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் தாமே வெற்றி பெறுவோம் என நினைப்பதும், புதிய நாடாளுமன்றம் அமைந்த பின்னரும் தானே ஜனாதிபதியாக இருப்பேனென எண்ணுவதும்,

அவ்வேளை புதிய அரசியலமைப்பு முயற்சி மேற்கொள்ளப்படும் என்று நம்பிக்கையூட்டுவதும் ரணில் தமிழரை தொடர்ந்து ஏமாற்றுவதற்கான முயற்சி.

நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் இவர் பிரதமராக இருந்தபோது புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அதற்கென பல குழுக்கள் அமைக்கப்பட்டு சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்கேற்புடன் புதிய அரசியலமைப்பு இதோ வருகிறது என்றும் அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையில் ஏற்பட்ட முரணைக் காரணமாக்கி அந்த முயற்சி அம்போ என கைவிடப்பட்டது. உண்மையாகவே ரணில் புதிய அரசியலமைப்பில் அக்கறை உள்ளவராக இருப்பின் அன்று தயாரிக்கப்பட்ட புதிய அரசியல் சட்டவரைபை முன்வைத்து பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும். ஆனால் அவர் விரும்புவது தீர்வு காண்பதை அல்ல. தீர்வு என்று பேசிப்பேசி காலத்தை இழுத்தடிப்பதே.

பிறக்கப் போகும் 2024ல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டியது கட்டாயம். தமிழர் பிரச்சனையை 13ம் திருத்தத்தினூடாக, மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்தவே தாம் விரும்புவதாக ரணில் கூறுவதும், புதிய அரசியலமைப்பினூடாக இனப் பிரச்சனைக்கு தம்மால் தீர்வு காண முடியுமென கூறுவதும் தமிழர் வாக்குகளை ஜனாதிபதி தேர்தலில் சுவீகரிப்பதற்காகவே. இது தமிழர்களுக்கு நன்கு தெரிந்தது.

இதனை ரணில் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே தொடர்ந்து தமிழரை ஏமாற்ற வேண்டாமென்று நெற்றிக்கு நேராக சம்பந்தன் கூறியது வரவேற்கத்தக்கது. ஆனால், இதனைக் கேட்டு ரணில் அச்சமடைந்திருப்பார், சம்பந்தனிடம் சரணாகதி அடைவாரென்று எதிர்பார்ப்பது மடமை.



தமிழர் தரப்பினரை எதற்காக ரணில் அவசரமாகச் சந்தித்தாரென்பதற்கு மிக முக்கியமான ஒரு காரணம் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது. அதுவே உண்மையாகவும் இருக்கலாம்.

ஏற்கனவே இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்தபோது 13ம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று வாக்குக் கொடுத்தவர் ரணில். இந்தியாவின் புதிய உயர்ஸ்தானிகராக சந்தோஷ் ஜா பதவியேற்பதற்கு முதல் நாள் தமிழர் தரப்பை ரணில் அழைத்துச் சந்தித்தார்.

சந்தோஷ் ஜா சம்பிரதாயபூர்வ சந்திப்பொன்றை ரணிலுடன் விரைவில் மேற்கொள்வார். அப்போது, தமிழர் தரப்புடன் நேரில் பேச்சு நடத்துகிறேன், 13ஐ முழுமையாக அமுல்படுத்தும் செயற்பாட்டில் இரு தரப்பும் ஈடுபட்டுள்ளோம் என்று கூறுவதற்கு தமிழர் தரப்புடனான சந்திப்பு அவருக்கு அவசியமாயிற்று.


## 31வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பர் பொன்னுத்துரை
### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 31வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள்.

இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

23 டிசம்பர் 2023 முதல் 29 டிசம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிரேசு முத்துத்தம்பி

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த அமரர் உயர்திரு கதிரேசு முத்துத்தம்பி அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 29 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு.கதிரேசு முத்துத்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 46வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னப்பு நல்லையா

யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கு ஊரெழுவைச் சேர்ந்த அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது 46வது ஆண்டு நினைவு நாள் 29 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பையா செல்லத்துரை

கட்டுவன் மேற்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா செல்லத்துரை அவர்களின் 30வது ஆண்டு நினைவு நாள் 27 டிசம்பர் 2023 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பையா செல்லத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா நன்னித்தம்பி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது முப்பதாவது ஆண்டு நினைவு நாள் 31 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு கந்தையா நன்னித்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பார்வதி சதாசிவம்

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 24 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 27 டிசம்பர் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்

### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 25 டிசம்பர் 2023 திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். இணையர்கள் இருவரதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




23 டிசம்பர் 2023 சனிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




24 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 டிசம்பர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஆனந்தசேகரன் அமிர்தலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஆனந்தசேகரன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




25 டிசம்பர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி குடும்பத்தினர் நத்தார்தின அன்பளிப்பாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




25 டிசம்பர் 2023 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளுக்காக நத்தார் தினத்தன்று அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 டிசம்பர் 2023 புதன்கிழமை கட்டுவன் மேற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு தம்பையா செல்லத்துரை அவர்களது 30வது அண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 டிசம்பர் 2023 புதன்கிழமை யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





28 டிசம்பர் 2023 வியாழக்கிழமை மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி திருவானந்தநாயகி தவராஜா அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




28 டிசம்பர் 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் முகுந்தனின் 35வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் முகுந்தன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




28 டிசம்பர் 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சற்குருநாதன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கிசோர் சற்குருநாதனின் 12வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கிசோர் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




29 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த திரு முத்துத்தம்பி கதிரேசு அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 35வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் முகுந்தன் நந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தன் நந்தகுமார் அவர்களின் 35வது பிறந்த நன்நாள் 28 டிசம்பர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் செல்வன் முகுந்தன் நந்தகுமார் தனது பெற்றோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை 35 காணும் செல்வன் முகுந்தன் நோய் நொடியின்றி அனைத்து வளங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!




29 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை யாழ்.ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திரு சின்னப்பு நல்லையா அவர்களது 46வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 டிசம்பர் 2023 வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

# 5வது ஆண்டு நினைவஞ்சலி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த

## திருமதி திருவானந்தநாயகி தவராஜா

அன்னையின் மடியில் 14.12.1967 - ஆண்டவன் அடியில் 28.12.2018



அன்பு என்னும் விழுதினை ஆலமரம் போல் ஊன்றி
பண்பு என்னும் கதிர்களை பகலவன் போல் பரப்பி
இல்லறம் என்னும் நல்லறத்தை
இமை போல் காத்து நின்றவளே!
நீங்கள் பிரிந்து ஆண்டு ஐந்து ஆனதுவோ? - இன்னும்
நம்ப முடியாமல் தவிக்கின்றோம்
உங்கள் ஒளி முகத்தை முன்னிறுத்தி
என்றும் உங்கள் மீளா நினைவுகளுடன் வாழகின்றோம்
நீங்கள் எம்மோடு இருப்பதாய் கற்பனையில்
காலத்தை கழிக்கின்றோம் தாயே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death


EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

சுவாமியே சரணம் ஐயப்பா!







# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### 17-11-2023 வெள்ளிக்கிழமை முதல் 21-01-2024 ஞாயிற்றுக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 16-11-2023 வியாழக்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 17-11-2023 வெள்ளிக்கிழமை - அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**

24-11-2023 வெள்ளிக்கிழமை, 25.11.2023 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 26-11-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**

01.12.2023 வெள்ளிக்கிழமை, 02.12.2023 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 10-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெறும்.

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 17-12-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், பேட்டை துள்ளுதல் படி ஏறி அபிஷேகம் செய்தல்**

25-12-2023 திங்கட்கிழமை, 26.12.2023 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 6:00 மணி முதல் மாலை 5:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2023 புதன்கிழமை தொடக்கம் 31.12.20223 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் நெய் அபிஷேகம் நடை பெறும்.

**பேட்டை துள்ளுதல்**

26-12-2023 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம்பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**

01-01-2024 திங்கட்கிழமை முதல் 15-01-2024 திங்கட்கிழமை வரை இடம்பெறும்.

**மகர சங்கிராந்தி, திருபாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**

15-01-2024 திங்கட்கிழமை



**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**

21-01-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.

**அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 17.11.2023 வெள்ளிக்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. ஆலயத்தினுள் கைத்தொலைபேசியை பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பதாயின் காரியாலயத்தில் அனுமதி பெற்றுக் கொள்ளவும்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை



கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

## கனடா முத்துமாரியம்மன்
## அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.

27 ஜனவரி 2024 சனிக்கிழமை கனடா முத்துமாரியம்மன் ஆலயத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## அம்பாள் பக்தர்களின் கவனத்திற்கு!

31 டிசம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12.00 மணிக்கு புதுவருட விசேட பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். 01 ஜனவரி 2024 திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பக்தர்களின் வழிபாட்டிற்காக ஆலயம் திறந்திருக்கும். அனைவரும் வருக! அம்பாளின் பேரருள் பெறுக!

## இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# இமாலயப் பிரகடனம் யாருக்கு சேவகம் செய்யும்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



இமாலயப் பிரகடனத்தைச் செய்ததன் மூலம் உலகத் தமிழர் பேரவை புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மத்தியில் பெருமளவுக்குத் தனிமைப்படுத்தப்பட்டு விட்டது. அந்த அமைப்புடன் இணைந்து மகிந்தவைச் சந்தித்த கனேடியத் தமிழ்க் கொங்கிரஸின் சில உறுப்பினர்கள் கனடாவில் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றார்கள். தாயகத்தில் பெரும்பாலான கட்சிகள் அப்பிரகடனத்தை நிராகரித்து விட்டன.

குடிமக்கள் சமூகங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தமிழரசுக் கட்சி இது விடயத்தில் அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. பிரகடனம் சம்பந்தரிடம் கையளிக்கப்பட்ட போது அவர் இந்த முன்னெடுப்பை நாம் பல ஆண்டுகளுக்கு முன்பே செய்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால் சிறிதரனைப் போன்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் அதற்கு எதிர்ப்புக் காட்டியிருக்கிறார்கள்.

அப் பிரகடனத்தின் பின்னணியில் சுமந்திரன் இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. பிரகடனமானது போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கை அரசைக் காப்பாற்றும் உள்நோக்கமுடையது என்று புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் குற்றம் சாட்டுகின்றன. இலங்கை வரலாற்றில் மகா சங்கத்தோடு தமிழ்த்தரப்பு கையெழுத்திட்ட முதலாவது உடன்படிக்கை இது. ஆனால் அது நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் தமிழ் மக்களால் பெருமளவுக்கு நிராகரிக்கப்பட்டுள்ளது.

பிரகடனக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் தரும் தகவல்களின்படி, பிரகடனக்குழு நேபாளத்துக்குச் சென்ற போது அதற்கு வேண்டிய வசதிகளை சுவிற்சலாந்து செய்து கொடுத்திருக்கின்றது. அந்த நாட்டின் இலங்கைக்கான தூதரகத்தில் முன்பு அரசியல் செயலராக இருந்த ஒருவர் மேற்படி சந்திப்புக்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்கிறார். ஆயின், அந்தப் பிரகடனத்தின் பின்னணியில் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட மேற்கு நாடுகளின் உள்நோக்கங்கள் இருப்பதாக எடுத்துக் கொள்ளலாமா?

அவ்வாறு ஒரு பிரகடனத்தை உருவாக்குவதால் மேற்கு நாடுகளுக்கு என்ன நன்மை? பிரகடனமானது ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது முன்னெடுத்து வரும் உண்மை மட்டும் நல்லினக்க ஆணைக்குழுவுக்கு மேலும் பலம் சேர்க்கும். அதாவது அவர் பொறுப்புக் கூறும் விடயத்தில் முன்னேறுவது போன்ற ஒரு தோற்றத்தை அது கட்டியெழுப்ப உதவும். அதன் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறும் வழிகளை இலகுவாக்கும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டால் அது ஒப்பீட்டளவில் தமக்கு அனுகூலமானது என்று மேற்கு நாடுகள் சிந்திக்கின்றன. எனவே தேர்தலை நோக்கி ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்த வேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு. போர்க் குற்றங்களுக்கு எதிரான பரிகார நீதியை அழுத்தமாக கேட்பது புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் தான். இந்த விடயத்தில் கனடாவில் உள்ள புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருக்கின்றது. எனவே புலம் பெயர்ந்த தமிழ் அமைப்பு ஒன்றை மகா சங்கத்துடன் உடன்பாட்டுக்கு வர வைப்பதன் மூலம் சிங்கள பௌத்தர்களின் பயங்களைக் குறைக்கலாம் என்று மேற்கு நாடுகள் சிந்திக்கின்றனவா?

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யூ லி சுங் சமூகங்களுக்கு இடையேயான புரிதலை விசாலமாக்குவதற்கும் நீடித்த நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான இந்த முயற்சியை நாங்கள் பாராட்டி வரவேற்கிறோம் என்று தனது ரூவீற்றறில் எழுதியுள்ளார். இலங்கை மற்றும் மாலை தீவுக்கான சுவிஸ் தூதுவர் சிறி வோல்ட் பிரகடனக் குழுவைச் சந்தித்த பின், இந்தச் சந்திப்பும், ஐக்கியத்திற்கான தொலைநோக்குப் பார்வையைக் கொண்ட பன்மைத்துவமும் அமைதியும் கொண்ட இலங்கையை உருவாக்கும் முன்னெடுப்பிலான இமாலயப் பிரகடனத்தை ஆதரிப்பதும் எமக்குப் பெருமை தருவதாகும். நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும் என ரூவீற் செய்துள்ளார்.

பொதுவாக மேற்கு நாடுகளில் நல்லிணக்க முயற்சிகளை மகா சங்கம் முழுமனதாக



ஆதரித்தது கிடையாது. ஆனால் இமாலய பிரகடனத்தை மகா சங்கம் எடுத்த எடுப்பில் எதிர்க்காததற்குக் காரணம் என்ன? இலங்கையில் மகா சங்கம் எனப்படுவது இலங்கை அரசுக் கட்டமைப்பின் ஒரு பகுதி. அது ஒரு மத நிறுவனம் என்பதை விடவும் அரசியல் நிறுவனம் என்பதே அதிகம் பொருத்தமானது. பல நூற்றாண்டு காலமாக அரசியல் செய்த ஒரு நிறுவனம். அதற்கு வேண்டிய பாரம்பரியமும் அனுபவமும் அவர்களுக்கு உண்டு. அந்த அடிப்படையில் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை பாதுகாப்பதற்கு அவர்களுக்கு இது போன்ற பிரகடனங்கள் தேவை.

பிரகடனக் குழு மல்வத்தபீடத்தை சந்தித்த பொழுது எதிர்பார்த்ததற்கு மாறாக மகாநாயக்கர் அதிகம் சினேகபூர்வமாகப் பழகியதாக பிரகடனக் குழுவினர் தெரிவிக்கின்றார்கள். பொதுவாக விருந்தாளிகள் வரும் பொழுது மகாநாயக்கர்கள் தமது உதவியாளர்களை பிரித் ஓதுமாறு பணிப்பதுண்டு. ஆனால் பிரகடனக் குழுவுக்காக அவரே பிரித் ஓதியிருக்கிறார்.

கடந்த காலங்களில் கட்சிகளுக்கிடையில் உருவாக்கப்பட்ட பல்வேறு உடன்படிக்கைகள் இல்லாமல் போவதற்கு வீதிக்கு இறங்கிய பௌத்த பிக்குகள் தான் காரணமென்று தமிழ் பிரதிநிதிகள் கூறியது உண்மை தான்......இனவாதத்தையும் வெறுப்பையும் போதிக்கும் இந்தப் பிக்குகளில் ஒரு சிறுபான்மையினர் உரத்த குரலில் இவற்றைப் பேசி வெற்றி பெற்றனர்.

ஏனென்றால் சமாதானத்தையும் சமத்துவத்தையும் விரும்பும் நம்மில் பெரும்பான்மையானவர்கள் அந்தச் சந்தர்ப்பங்களில் போதுமான அளவு உரத்த குரலில் பேசவில்லை. எதிர்காலத்தில் நாம் அதைச் செய்ய வேண்டும் என்றும் மகாநாயக்கர் கூறியுள்ளார்.

பௌத்த மகா சங்கங்கள் இதுவரை வெளியிட்ட அறிக்கைகள் மற்றும் கருத்துக்களின்படி அவர்கள் இமாலய பிரகடனத்தை எதிர்க்கவில்லை என்பது ஒரு தொகுக்கப்பட்ட அவதானிப்பு. பௌத்த மகா சங்கம் எதிர்க்கவில்லை என்றால் அது சிங்கள பௌத்த கட்சிகளின் முடிவுகளில் பெருமளவு தாக்கத்தைச் செலுத்தும்.

அதே சமயம் இப்பிரகடனம் ரணிலைப் பிணையெடுக்கக் கூடியது என்பது எதிர்க்கட்சிகளுக்கு உவப்பானது அல்ல. எனினும் மகா சங்கத்தைப் பொறுத்தவரை அது கட்சி கடந்து சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பை எப்படி பாதுகாப்பது என்றுதான் சிந்திக்கும்.

ஒரு புறம் நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றும் தகமை ரணிலுக்கே இருப்பதாக மகா சங்கம் கருதுகின்றது. எனவே ரணிலைப் பலப்படுத்த இப்பிரகடனம் உதவும். இன்னொருபுறம் அவர்களுடைய போர் வெற்றி நாயகர்களான ராஜபக்சக்களையும் படைப் பிரதானிகளையும் பாதுகாக்க வேண்டும். ஏற்கனவே கனடா மூத்த இரண்டு ராஜபக்சக்களுக்கும் படைப்பிரதானிகளுக்கும் எதிராகத் தடைகளை விதித்திருக்கிறது. அமெரிக்காவிலும் நிலைமை இறுக்கமாக இருக்கிறது. சில ஐரோப்பிய நாடுகள் முன்னாள் படைத் தளபதிகளுக்கு விசா வழங்குவதில்லை. கடைசியாக நடந்த ஐநா கூட்டத் தொடரில் ஐநா மனித உரிமைகள் பேரவையின் உதவி ஆணையாளர் மேலும் 10 படைத் தளபதிகளைக்



குறித்துப் பிரஸ்தாபித்திருந்தார். எனவே சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் ஒரு பகுதியாகிய படைக்க கட்டமைப்பைப் பாதுகாக்க வேண்டிய தேவை அதே அரசு கட்டமைப்பின் மற்றொரு பகுதியான பௌத்த மகா சங்கத்துக்கு உண்டு. அந்த அடிப்படையில் இது போன்ற பிரகடனங்களின் மூலம் மேற்கு நாடுகளைத் திருப்திப்படுத்தி நல்லிணக்க முயற்சிகளைத் தமக்கு பாதுகாப்பான எல்லைக்குள் இருந்தபடி ஊக்குவித்து, தமது படைக் கட்டமைப்பைப் பாதுகாக்க மகா சங்கம் முயற்சி செய்கின்றது என்று எடுத்துக் கொள்ளலாமா?

மேற் கண்டவற்றைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது என்னவென்றால், ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்க வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கு உண்டு. பன்னாட்டு நாணய நிதியத்துக்கு உண்டு. பௌத்த மகா சங்கத்துக்கு உண்டு ராஜபக்சங்களுக்கு உண்டு. எனவே மேற்கண்ட எல்லாருடைய நலன்களையும் ஒரு பொதுப் புள்ளியில் இணைப்பதற்கு இமாலயப் பிரகடனம் உதவுமா?

அதேசமயம் உள்ளூரில் உலகத் தமிழர் பேரவைக்கு வேறு ஒரு உள்நோக்கம் இருக்க முடியும் என்று யாழ்ப்பாணத்தில் ஊடக வட்டாரங்களில் ஊகங்கள் உண்டு. சுமந்திரனுக்கும் ரணிலுக்கும் இடையே இப்பொழுது இடைவெளி அதிகம். சுமந்திரனுக்கு நெருக்கமான சாணக்கியன் ரணிலின் மீது அளவுக்கு மிஞ்சி வாய் வைத்து விட்டார். அதனால் இடைவெளி மேலும் அதிகரித்திருக்கின்றது.


ஆனால் அடுத்த ஜனாதிபதியாக ரணில் வருமிடத்து, அப்படி ஒரு இடைவெளியை வைத்திருப்பது மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்குப் பாதுகாப்பாக இருக்காது. எனவே சுமந்திரனை ரணிலை நோக்கிக் கொண்டு செல்லும் நோக்கத்தோடு இப்படி ஒரு பிரகடனம் உருவாக்கப்பட்டதா? என்பது அந்த ஊகம். இந்தப் பிரகடனம் அதன் இறுதி அர்த்தத்தில் ரணிலைப் பிணையெடுக்கும். அவ்வாறு சுமந்திரனுக்கு நெருக்கமான அமைப்பொன்று ரணிலைப் பிணையெடுத்து அவருடைய நன்மதிப்பை வென்று அதன் மூலம் சுமந்திரனுக்கும் ரணிலுக்கும் இடையிலான இடைவெளியை குறைக்கலாம் என்று ஒரு விளக்கம் கூறப்படுகின்றது.

இருக்கலாம் மேற்படி பிரகடனம் ரணிலைப் பிணையெடுப்பதற்கு உதவும் என்பது வெளிப்படையானது. அது மேற்கு நாடுகளின் நல்லிணக்க நிகழ்ச்சி நிரலை சிங்கள பௌத்த நோக்கு நிலையிலிருந்து முன்னெடுப்பதற்கும் உதவலாம். போர்க் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களைப் பாதுகாப்பதற்கு உதவலாம். சில சமயம் சுமந்திரனுக்கு ரணிலுக்குமிடையில் இடைவெளியைக் குறைக்க உதவலாம். ஆனால் தமிழ் மக்கள் தமது அரசியல் இலக்குகளை வென்றெடுப்பதற்கு அது உதவப் போவதில்லை.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஆய்வுக் கப்பல்களுக்குத் தடை தீர்வாகுமா?

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இலங்கையின் கடல் எல்லைக்குள் ஆய்வுகளை மேற் கொள்வதற்கு வெளிநாட்டு கப்பல்களுக்கு, தடை விதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. எதிர்வரும் ஜனவரி தொடக்கம், ஒரு வருடத்திற்கு இந்தத் தடை நீடிக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருக்கிறார்.

அண்மைக் காலமாக சீனாவின் ஆய்வுக் கப்பல்களை இலங்கை அனுமதிப்பது தொடர்பான விவகாரம் அரசாங்கத்துக்கு தலைவலியாக மாறி இருக்கிறது. இலங்கைக்குள் ஆய்வுக் கப்பல்கள் என்ற பெயரில் இலங்கைக்கு வரும் சீன கப்பல்கள், இந்தியாவை உளவு பார்க்கவே வருவதாக புது டெல்லி கருதுகிறது.

இந்தியாவை கண்காணிப்பதற்கும், இந்தியாவின் கேந்திர நிலைகளை உளவு பார்ப்பதற்கும், இலங்கையை சீனா பயன்படுத்திக் கொள்கிறது என்ற கவலை இந்திய அரசுக்கு இருக்கிறது. அதனால் தான் கடந்த ஆண்டும், இந்த ஆண்டு ஒக்டோபர் மாதமும் சீனாவின் இரண்டு ஆய்வுக் கப்பல்கள் கொழும்பில் தரித்து நிற்பதற்கும், இலங்கையின் கடற்பரப்பில் ஆய்வுகளை மேற் கொள்வதற்கும், அனுமதிக்க வேண்டாம் என்று இந்தியா வலியுறுத்தியது.

ஆனால், இந்தியாவின் எதிர்ப்பையும், அழுத்தங்களையும் புறக்கணித்து, ஏதேதோ சாட்டுப் போக்குகளைச் சொல்லி அந்த இரண்டு கப்பல்களையும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அனுமதித்து விட்டது. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் எதிர்ப்பையும் மீறி, தங்களின் இரண்டு ஆய்வுக் கப்பல்களை இலங்கையில் நிறுத்துவதற்கு அனுமதி பெற்று விட்ட சீனா, இப்போது அடுத்த கப்பலை இலங்கை நோக்கி அனுப்பியிருக்கிறது.

தென்சீனக் கடலுக்கு அப்பால் உள்ள சியாமென் பகுதியில் இருந்து சியாங் யாங் ஹோங் 03 என்ற இந்தக் கப்பல், ஏற்கெனவே புறப்பட்டு மலாக்கா நீரிணை வழியாக இலங்கை மற்றும் மாலைதீவு கடற்பரப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஆய்வுக் கப்பலை ஜனவரி தொடக்கம், மே வரையான காலப்பகுதியில் கொழும்பில் தரித்து நிறுத்தவும் இலங்கை கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் அனுமதிக்குமாறு சீன அரசாங்கம் கோரியிருந்தது. இலங்கை அரசாங்கம் அதற்கு பதிலளிக்காமல் நழுவி வந்தது. இந்தக் கப்பலுக்கு அனுமதி மறுப்பது இலங்கை அரசாங்கத்தின் திட்டமாக இருக்கவில்லை. சீனாவின் ஆய்வு கப்பலுக்கு இந்தியா தொடர்ச்சியான எதிர்ப்புகளை தெரிவித்து வந்ததால் அதனை சமாளிப்பதற்கு புதிய திட்டம் ஒன்றை இலங்கை அரசாங்கம் உருவாக்கியது.

இலங்கைக்கு வெளிநாட்டுக் கப்பல்களை அனுமதிப்பது தொடர்பான வழிகாட்டு நெறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி, இந்தியா, சீனா, அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா என எந்த நாட்டு கடற்படைக் கப்பல்களும், இலங்கைக்கு வரும் போது பொதுவாக கடைப்பிடிக்க வேண்டிய அவற்றுக்கு அனுமதி அளிப்பது தொடர்பான கொள்கை ஒன்று வகுக்கப்பட்டது. இது எல்லா கடற்படைக் கப்பல்களையும் சமமாக கருதுகின்ற வகையிலானது என்று கூறப்படுகிறது. இந்த வழிகாட்டு நெறிமுறை .லங்கை துறைமுகங்கள் மற்றும் கடற்பரப்பை பயன்படுத்தும் நாடுகளுக்கு இலங்கை அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டது.



எனினும், இந்த வழிகாட்டு நெறிமுறையை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரியவருகிறது. ஏனென்றால், இலங்கைக்கு இந்திய, அமெரிக்க கப்பல்கள் வருவது போலவே, சீன கடற்படைக் கப்பல்களுக்கும் வருவதற்கான உரிமை உள்ளது என்பதை இந்த ஆவணம் வலியுறுத்துகிறது. இலங்கைத் துறைமுகங்களை அதிகம் பயன்படுத்துவது இந்தியா தான். அதனை காரணமாக முன் வைத்து முக்கியமான சீன கப் பல்கள் தரித்துச் செல்வது மற்றும் ஆய்வில் ஈடுபடுவதற்கு அனுமதி அளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முற்பட்டது. ஆனால், இந்தியாவின் கரிசனையும், கவலையும் வேறுபட்டது.

எத்தனை சீனக் கப்பல்கள் வருகின்றன என்பதல்ல, எவ்வாறான கப்பல்கள் வருகின்றன என்பது தான் முக்கியமானது பிரச்சினைக்குரியது என்று இந்தியா கூறியிருக்கிறது. .லங்கையின் கடற்பரப்பில் ஆய்வு செய்வது, அதனை அண்டிய கடற்பரப்பை உரிமையாக கொண்டிருக்கும் இந்தியாவுக்கு ஆபத்தானது என்கிறது புதுடெல்லி.

ஆய்வு என்ற பெயரில் இலங்கைக்கு மிக நெருக்கமாக வரும் சீனக் கப்பல்களால், இந்தியாவின் கேந்திர நிலைகளை ஆய்வு செய்ய முடியும் என்று கருதுகிறது இந்தியா. இதனால் இலங்கை அரசாங்கத்தின் நெறிமுறைகளை இந்தியா ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

இது அரசாங்கத்தை பெரிதும் ஏமாற்றமடையச் செய்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத் தான், இலங்கை கடற்பரப்பில் வெளிநாட்டுக் கப்பல்கள் எதுவும் ஆய்வுகளை மேற்கொள்வ தற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் ஓய்வு கொடுக்க தீர்மானித்திருக்கிறது.

இலங்கை அரசாங்கம் இந்த முடிவை எடுப்பதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உள்ளன. ஒன்று, அடுத்த ஆண்டு நடக்கவுள்ள பிரதான தேர்தல்கள். ஜனாதிபதி தேர்தலும், பொதுத் தேர்தலும் அடுத்த ஆண்டில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்.

சீனக் கப்பல்களுக்கு அனுமதி அளித்தால், இந்தியா கோபம் அடையும், அனுமதி அளிக்காது போனால் சீனா கோபம் கொள்ளும். இதனால் ஏதேனும் ஒரு நாட்டுடன் முரண்பாடு ஏற்படும். இந்த முரண்பாட்டினால் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள தேர்தல்களில் இந்த நாடுகள் தலையிடும் நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்ற கவலை அரசாங்கத்துக்கு இருக்கிறது. 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டதற்குப் பின்னால், இந்தியா இருந்தது என்ற பொதுவான கருத்தும், குற்றச்சாட்டுகளும் .ன்னமும் நீடிக்கின்றன.

அதேவேளை, 2019இல் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்வதில் சீனாவின் பங்கு இருந்ததான கருத்து, பலரிடம் இருந்தாலும், அது அதிகளவில் வலுப் பெறவில்லை. கொவிட் தொற்றுச் சூழல் அதுபற்றிய விவகாரங்களை அதிகம் வெளிக்கொண்டு வருவதை தடுத்து விட்டது. அடுத்து வரும் தேர்தல்களில் இவ்வாறான தலையீடுகள் இருக்கக் கூடாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருதுவதில் நியாயம் இருக்கிறது.

2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்படுவதற்கு சீனாவின் நீர்மூழ்கி கப்பல் ஒன்று கொழும்பில் தரித்துச் சென்றது முக்கியமான காரணமாக இருந்தது. அவ்வாறான நிலை, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ள தனக்கும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு வந்திருப்பதில் ஆச்சரியம் இல்லை.

அடுத்தது, பூகோள அரசியல் போட்டியினால் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையில் மல்லுக்கட்டுவது இப்போது அரசாங்கத்துக்குப் பெரும் சிக்கலாக மாறியிருக்கிறது. பூகோள அரசியல் போட்டியில் இலங்கை பங்காளராக இருக்கவில்லை என்றும், அணி சேராக் கொள்கையின் அடிப்படையில், இந்தியாவையும், சீனாவையும் எந்த பிரச்சினையும் இன்றி கையாளுவதாகவும், மார் தட்டி வந்த இலங்கை அரசாங்கம், அண்மைக் காலத்தில் தான், அதில் சிக்குப்பட்டிருப்பதை ஒப்புக் கொண்டது.

இந்தப் பிரச்சினையால், கடன் நீடிப்பு வசதி, முதலீடு போன்ற வாய்ப்புகள் கெட்டுப் போகும் அபாயம் இருப்பதால், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளும் வரை இந்த சர்ச்சையில் சிக்கிக் கொள்வதை தவிர்க்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. அதனால் தான், அடுத்த ஒரு வருடத்துக்கு இலங்கை கடற் பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதிப்பதில்லை என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் நீரியல் வள ஆய்வு திறனை அதிகரித்துக் கொண்ட பின்னர், பிற நாடுகளுடன் சமமான பங்காளராக ஆய் வுகளில் ஈடுபடுவோம் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியிருக்கிறார். சமுத்திரவியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் தங்களின் திறனை அதிகரிப்பதை முதல் கட்டத் தேவையாக அரசாங்கம் கருதுகிறது. சில வாரங்களுக்கு முன்னர் இந்தியாவின் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு செவ்வியளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், சீன ஆய்வுக் கப்பல் சர்ச்சைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அவர்கள் இங்கு வந்து ஆய்வு செய்வது பற்றி பதிலளிப்பதற்குப் பதிலாக, எங்களின் சமுத்திரவியல் ஆய்வு திறனை அதிகரித்து, தென்சீனக் கடலில் போய் ஆய்வு செய்வோம் என்று நகைப்புடன் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை கடற்படை அண்மையில் சமுத்திரவியல் ஆய்வு பணியகம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. ஆனால் அது தென் சீனக்கடல் வரைக்கும் செல்லுமா அதற்கான திறன்கள் இருக்கிறதா என்று ஜனாதிபதியே பதிலளிக்க வேண்டும்.

அதேவேளை, இலங்கை கடல் எல்லைக்குள் ஆய்வுகளை மேற்கொள்வதில்லை என்ற இலங்கை அரசாங்கத்தின் முடிவு இந்தியாவுக்கு உவப்பான செய்தியாக இருக்க முடியாது. தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்று சிந்திக்கும் நிலையில் இந்தியா இல்லை.

பிராந்தியத்தில் சீனாவின் நுழைவு தடுக்கப்பட்டு விட்டது என்று இந்தியா குதூகலம் அடைய முடியாது. ஏனென்றால், மாலைதீவின் ஜனாதிபதி மொஹம்மட் முய்ஸு, இந்தியக் கப்பல்கள் தங்களின் நாட்டு கடற்பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு தடை விதித்திருக்கிறார். ஏற்கெனவே மாலைதீவில் இருந்து இந்தியப் படைகளை வெளியேறுமாறு அறிவித்து, இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்த மொஹம்மட் முய்ஸு கொடுத்திருக்கின்ற இரண்டாவது அதிர்ச்சி இது.

இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகள் விதித்துள்ள இந்த தடையினால், இந்தியப் பெருங்கடலில், இந்தியாவுக்கு தென்பகுதியில் உள்ள கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதில் இருந்து இந்தியா விலக்கி வைக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இது இந்தியாவுக்குப் பின்னடைவு. அதேவேளை, சீனா விடயத்தில் மாலைதீவு அமைதியாக இருந்தால், அது இந்தியாவுக்கு மேலும் பின்னடைவாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.


# சாதனையாளர்களைக் கௌரவித்து சிறப்பாக நடைபெற்ற
# கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கத்தின் 11வது ஆண்டு விழா



























இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கம் கனடாவின் 11வது ஆண்டு விழா கடந்த 26 டிசம்பர் 2023 செவ்வாய்க் கிழமை சங்கத்தின் தலைவரும் சமூக சமய பொதுநல ஆர்வலரும் ஆதரவாளருமாக திரு சோம.சச்சிதான ந்தன் அவர்கள் தலைமையில் ஸ்காப ரோவில் நடை பெற்றது. பிரதம விருந்தினராக இலங்கையின் முன்னாள் உதவி அரசாங்க அதிபரும் கனடா வின் Senthil Financial Servivices அதிபர் திரு செந்தில் ஆறுமுகம் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இலங்கையிலும் கனடிய மண்ணிலும் ஒலி ஒளி ஊடகத்துறையில் சிறப்பாக பணியாற்றிய திரு பீவிக்கினேஸ்வரன் அவர்களும் கீதவாணி மற்றும் ஈஸ்ட் எவ்எம். வானொலி அதிபருமாக திரு நடா ராஜ்குமார் அவர்களும் கௌரவிக் கப்பட்டனர். இவர்கள் இருவர் பற்றி தமிழர் தகவல் ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் அவர்கள் அறிமுகவுரை நிகழ்த்தினார். அவர் தனதுரையில் திரு பி.விக்கினேஸ்வரன் அவர்கள் தாயகத்திலும் கனடாவிலும் ஒலி ஒளி ஊடகத்துறையை எவ்வளவு நேர்த்தி யாகக் கையாண்டவர் என்பதை தனது அனுபவப் பார்வை ஊடக எடுத்துரை த்தார்.

அதே போன்று திரு நடா ராஜ்குமார் அவர்கள் கனடா மண்ணில் 30 ஆண்டுகளுக்கு முன் கீதவாணி வானொலியை ஆரம்பித்து இன்று பல்வேறு சவால்கள் போட்டிகளுக்கு மத்தியில் ஈஸ்ட்எவ்.எம். என்ற பன் பலை வானொலியை நடத்தும் அளவு க்கு வளர்ச்சி கண்டுள்ளார் என்றால் அவரது தொழில் பக்தியும் விசுவாச மும் தான் காரணம் என்று தெரிவித் தார். இது தவிர வர்த்தகத்துறை, சமூகம், பொதுப்பணி என கனடா மண்ணில் வாழும் சாதனையாளர்கள் ஏழு பேர் கௌரவிக்கப் பட்டனர்.

சிறந்த வீடு விற்பனை முகவருக்கான விருது திரு திருமதி அபிராமி (அபி) அமலன் இணையருக்கு வழங்கப்பட் டது.

மக்கள் மனம் கவர்ந்த வீடியோ கலைஞருக்கான விருது திரு பொன் னுச்சாமி ஜெயராஜன் (வீடியோ ஜெயா) அவர்களுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த காப்புறுதி முகவருக்கான விருது திரு தனா மாணிக்கவாசகர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

தங்க நகை வியாபாரத்தில் நம்பிக்கை நாணயத்தோடு மிகச் சிறந்த வாடி க்கையாளர் சேவை விருது திரு கனக சபை பேரின்பநாதன் (அம்மன் யூவ லர்ஸ்) அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மிகச் சிறந்த வர்த்தகர் விருது சத்திய குமார் இராசமாணிக்கம் (சத்தி Aro Courier) அவர்களுக்கு வழங்கப்பட் டது.

இலங்கையில் மிகச் சிறந்த வர்த்தக ராகத் திகழ்ந்த திரு பாலரெத்தினம் சுந்தரலிங்கம் அவர்களுக்கு வழங்கப் பட்டது.

நாட்டுப்பற்று மொழிப்பற்று நிறைந்த வரும் உறவு தேசம் ஊர் கிராம அபிவிருத்தி என்று பல்வேறு பொதுப் பணிகளில் நேர காலம் கருதாமல் உழைத்து வருபவரும் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் அங்கத்தவருமான திரு குமார.மனோ கரன் அவர்களுக்கு சமூக நல தன்னார் வத் தொண்டருக்கான விருது வழங்க ப்பட்டது. அத்துடன் சுப்பிரமணியம் தவகுகதாசலிங்கம் அவர்களுக்கும் சிறந்த சமூக தோழமை விருது கொடுக்கப்பட்டது.

கனடாவின் முன்னணி இசைக்குழு வான அரவிந்தனின் மெகாரியுனஸ் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

வர்த்தக தீபத்தில் ஓம் மீரா நகை மாளிகையின் இரண்டு பவுன் பெறுமதி மிக்க தங்கச் சங்கிலி அன்பளிப்பாக வழங்கப்பட்டு 2000 டொர்களுக்கு ஏலத்தில் வீடு விற்பனை முகவர் திரு அமலன் அவர்கள் பெற்றுக் கொண் டார். விழா சிறப்புற அனைத்து வகை யிலும் உதவியவர்களுக்கு தலைவர் திரு சோம.சச்சிதானந்தன் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் பல்வேறு சங்கங்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்து வருவதைப் பலரும் அறிவார்கள். பல ஊர் அமை ப்புக்கள், சங்கங்களில் பதவிகளில் இருப்பவர்கள் தமது பதவிக் காலம் முடிய ஒதுங்கிக் கொள்வார்கள் ஆனால் இலங்கை முன்னாள் வர்த்த கர்கள் சங்கத்தினர் இதனை மாற்றி அமைத்துள்ளார்கள்.

கடந்த ஆண்டு சங்கத்தின் முக்கிய பொறுப்புக்களில் இருந்த திரு கிரு ஷ்ணகோபால் அவர்கள் திரு கேதா நடராஜா அவர்கள் திரு அருண் குல சிங்கம் அவர்கள் திரு கல்யாண சுந்தரம் அவர்கள் இவ்வாண்டின் செயற்பாட்டு நிர்வாகிகளுடன் இணை ந்து முழு மூச்சாகப் பணியாற்றினார் கள் என்று விழா மண்டபத்தில் வர்த்தகர்கள் ஆர்வலர்கள் இவர்களைப் பாராட்டியதைக் காணக் கூடியதாக இருந்தது.

உண்மை நேர்மை விசுவாசத்தோடு உழைத்தால் பாராட்டுக்களும் கௌரவ ங்களும் தேடி வரும் என்பதை பறை சாற்றிய விழாவாகவும் இது அமை ந்தது. சங்கம் மேன்மேலும் வளர வாழ்த்துக்கள்.

Scarborough Convention Centre இல் இந்நிகழ்வு நடைபெற்றது. மண்டப ஒழுங்கமைப்பு மேடை அமைப்பு அமைப்புக்கள் சிறப்பாக இருந்தது. மிக முக்கியமான இராப்போசன விருந்து உணவுகள் மிக மிக சுவையாகவும் சூடாகவும் இருந்தது. விழாவுக்கு வந்தோரின் மனமும் வயிறும் மனமார மகிழ்ந்திருந்தது. விழாவினை பிரபல வானொலி தொலை க்காட்சி அறிவிப்பாளர் திரு சுதாகரன் அவர்கள் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் செய்திருந்தார்.

புகைப்பட உதவி ஜயா 4 யூ

# இதய நாயகன் புரட்சிக் கலைஞர் விஜயகாந்த்

கோடிக்கணக்கான ரசிகர்களின் இதய நாயகன் புரட்சிக் கலைஞர், கலைமாமணி கப்டன் விஜயகாந்த் 28.12.2023 மண்ணுலகிலிருந்து விடை பெற்றார்.

இந்திய தமிழ் சினிமா வரலாற்றில் ரசிகர்களின் ஏகோபித்த அபிமான ஜனரஞ்சக நடிகரும், தே.மு.தி.கவின் தலைவருமான கப்டன் விஜயகாந்த் சென்னை தனியார் மருத்துவமனையில் தனது 71ஆம் அகவையில் காலமானார் .....!



ஒவ்வொரு கலைஞனும் தன் வாழ்நாளில் ஏதோவொரு அடையாளத்தை தான் பிறந்த மண்ணிற்கு இட்டுச் செல்கின்றான். அவ்வாறு இந்திய சினிமா உலகில் போற்றப்பட கலைஞர்களில் கலைவாணர் என். எஸ் .கிருஷ்ணன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.நடிகர் திலகம் சிவாஜி கணேசன் செல்வி ஜெயலலிதா ஆகியோரை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

அந்த வரிசையில் கப்டன் விஜயகாந்தை அவசியம் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். மேற்கண்ட கலைஞர்கள் வெறும் பணத்திற்காகவும் புகழுக்காகவும் தங்களை வளர்த்துக் கொள்ளாமல் மக்களிடையே நல்ல பல சமூகப்பணிகளை தன்னலம் கருதாமல் வழங்கியுள்ளனர். அந்த அடிப்படையில் மக்கள் திலகம் எம்ஜியாருக்குப் பின் தமிழகத்தில் பேசப்பட்ட ஒரு நடிகர் விஜயகாந்த் என்றால் அது மிகையாகாது.

கறுப்பு எம்ஜியார் கறுப்புத்தங்கம் புரட்சிக் கலைஞர்’ கப்டன்’ என மக்களால் புகழாரம் சூட்டப்பட்டு பல ரசிகர்களை ஈர்த்ததவர் விஜயகாந்த். தன் சொந்த வாழ்வில் பல துயர் நிறைந்த கட்டங்களை அனுபவித்து எவ்வித பக்கபலமின்றி தன்னம்பிக்கையை மட்டுமே மனதில் இருத்தி படிப்படியாக தமிழ் சினிமாவில் உயர்ந்து மக்கள் மனதில் இடம் பிடித்த நடிகர்களில் விஜயகாந்த் குறிப்பிடத்தக்க ஜனரஞ்சக கலைஞராவார்.

இவரின் உண்மையான பெயர் நாராயணசாமி பின் விஜயராஜ் என அழைக்கப்பட்டார். சினிமாவிற்காக விஜயகாந்த் என மாற்றிக்கொண்டார். விஜயகாந்த் மதுரை மாவட்ட திருமங்கலத்தில் கே.என்.அழகர்சாமி நாயுடு .ஆண்டாள் அம்மையார் இணையருக்கு 1952.ஒகஸ்ட் 25 இல் பிறந்தார். இவரின் தந்தை அழகர்சாமி தன் தந்தை நாராயணசாமி நினைவாக ’நாராயணசாமி ’என்ற பெயரையே முதலில் இட்டார். பின்னர் விஜயராஜ் என அழைக்கப்பட்டார். சிறுவயதிலேயே அவரது குடும்பம் மதுரைக்கு இடம் பெயர்ந்தது.

இவர்கள் தெலுங்கை தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்பது பலருக்குத் தெரியாத உண்மையாகும். விஜயகாந்துடன் மொத்தமாக நான்கு பிள்ளைகள். விஜயகாந்தின் தங்கை ஒருவர் பிறந்த அதே நாளில் விஜயகாந்தின் தாயார் ஆண்டாள் காலமானார். பின்னர் ஒரு வருடம் கழித்து அழகர்சாமி ருக்மணி என்பவரை மணந்து ஏழு பிள்ளைகளுக்கு தந்தையானார். ஆக விஜயகாந்த் குடும்பத்தில் மொத்தமாக பதினொரு பேர். சிறு பராயத்திலேயே சினிமா மீது தனது ஆர்வத்தை வளர்த்துக் கொண்டதால் படிப்பில் ஆர்வம் காட்டவில்லை.

தேவகோட்டை பிரிட்டோ உயர்நிலைப் பள்ளியிலும் மதுரை நாடார் உயர் நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்று பத்தாம் வகுப்புடன் படிப்புக்கு மங்களம் பாடினார் விஜயகாந்த். தன் தந்தையின் மேற்பார்வையில் இயங்கிய அரிசி ஆலையில் விஜயகாந்த் தனது பதின்ம வயதில் சிறு சிறு வேலைகளைச் செய்து வந்தார். இளவயதிலே அரிசி ஆலையை மிகச் சிறந்த முறையில் நிர்வாகம் செய்தார்.

மதுரையில் ’சைனா பி.ஃல்ம்ஸ்’ மர்சூக் என்ற நண்பரின் அலுவலகத்தில் நண்பர்களுடன் பொழுதுகளை போக்கினார் விஜயகாந்த். ஊர் வம்புகளை முன்னின்று வாங்கி பல பஞ்சாயத்துக்களிலும் ஈடுபட்டார். தனது 13வது வயதில் மதுரையில் 1965 இல் நடந்த ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து முழக்கமிட்டார்.

தாயார் ஆண்டாள் மறைவுக்குப் பின் அக்கா விஜயலட்சுமியின் கண்காணிப்பில் வளர்ந்தார். விஜயலட்சுமி ஓர் மருத்துவர். அக்கா சொல்லுக்கு என்றும் மதிப்பளிப்பவர் விஜயகாந்த். மக்கள் திலகம் எம்ஜியார், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் போன்ற தமிழ் திரை ஜாம்பவான்களின் படங்களைப் பார்த்து தானும் தமிழ் சினிமாவில் ஓர் பெரிய நடிகராக உயர வேண்டும் என்பதே இவரது லட்சியமாக இருந்தது.

மக்கள் திலகம் எம்ஜியாரின் நடிப்பாலும் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்டு அவரின் தீவிர ரசிகராக மாறினார். மக்கள் திலகத்தை தன் மானசீக குருவாக மனதில் இருத்திக் கொண்டார் விஜயகாந்த். எம்ஜியார் நடித்த ’எங்க வீட்டுப்பிள்ளை ’படத்தை 70 தடவைகளுக்கு மேல் மதுரை சென்ட்ரல் திரையரங்கில் பார்த்தார். பின் நண்பர்களிடையே ஒவ்வொரு காட்சிகளாக நடித்துக் காட்டுவார். நண்பர்களின் தூண்டுதல்களாலும் ஆர்வம் காரணமாகவும் இவரது இலக்கு சதா சினிமாவிலேயே இருந்தது. இந்த உத்வேகத்தால் சென்னைக்கு விஜயம் மேற்கொண்டு எழும்பூரில் ஓர் அறையை வாடகைக்கு பெற்றுக் கொண்டு ஒவ்வொரு சினிமாக் கம்பனிகளிலும் வாய்ப்புக்காக சில ஆண்டுகள் அலைந்தார்.

தொடர் முயற்சிக்குப் நண்பர் ’சைனா பி.ஃல்ம்ஸ்’மர்சூக் வாயிலாக 1978 இல் ஒரு படத்தில் நடிக்க வாய்ப்பு வந்தது. மேக்கப் சோதனையில் இவர் கறுப்பாக இருப்பதாகவும் தமிழ் உச்சரிப்பு சரியாக வரவில்லை என்ற காரணங்களாலும் நிராகரிக்கப்பட்டார்.அ து விஜயகாந்த்துக்கு முதல் ஏமாற்றமாக இருந்தது.

இந்நிலையில் விஜயகாந்த் மர்சூக் மூலம் இயக்குனர் எம்.ஏ.காஜாவுடன் அறிமுகமாகி ’இனிக்கும் இளமை’படத்தில் வில்லனாக அறிமுகமாகி நடிக்கும் வாய்ப்பைப் பெற்றார். இவர் நடித்த முதல் படம் இனிக்கும் இளமை அப்போது தமிழ் சினிமாவில் ரஜினிகாந்த்திற்கு நல்ல ஏற்றம் நிறைந்த காலகட்டம். எனவே விஜயராஜ் என்ற பெயரில் இருந்த ராஜை எடுத்து விட்டு ரஜினிகாந்த்தில் இருந்த’ காந்தை சேர்த்து விஜயகாந்த் என மாற்றினார் இயக்குனர் எம்.ஏ.காஜா. பின்னர் அகல் விளக்கு சாமந்திப்பூ நீரோட்டம் போன்ற படங்களில் நடித்தார்.

இம் மூன்று படங்களும் தோல்வியைத் தழுவியது. இருப்பினும் முயற்சியை கைவிடாமல் 1980 இல் கே.விஜயன் இயக்கத்தில் இவர் நடித்த ’தூரத்து இடிமுழக்கம்’ அமோக வெற்றி பெற்றது. இப்படத்தில் ’பொன்னன்’ என்ற மீனவனாக நடித்து அனைவரினதும் பாராட்டுகளை பெற்றார். இதன் பின் எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கத்தில் இவர் நடித்த சட்டம் ஒரு இருட்டறை விஜயகாந்தை இரே இரவில் தமிழ் சினிமாவின் உச்சத்தில் நிறுத்தியது. இவர் நடித்த ’அலையோசை’படத்தில் இடம் பெற்ற ’போராடடா’என்ற பாடல் சாதி எதிர்ப்பு பாடலாக இன்றளவிலும் ஜனரஞ்சகமாக அமைந்தது. சுட்டெரிக்கும் மதுரையிலிருந்து கரிய நிறத் தோலுடனும், சிவந்த கண்களுடனும் சென்னை சினிமாக்களம் வந்த விஜயகாந்த்தை ஆரம்பத்தில் பலர் கேலியும் கிண்டலுமாகப் பேசினர் பின்னர் விஜயகாந்தின் நடிப்பாற்றலைப் போற்றத் தொடங்கினர்.

சட்டம் ஒரு இருட்டறை’ வெற்றிக்குப் பின் விஜயகாந்த் எஸ்.ஏ.சந்திரசேகரன் கூட்டணி சுமார் இருபதிற்கும் மேலான படங்களில் கரம் கோர்த்து வெற்றி கண்டனர்.தொடர் தோல்வி படங்களால் துவண்டு போன தன் மகன் விஜயை விஜயகாந்துடன் இணைத்து ’செந்தூர பாண்டி’ படத்தில் நடிக்க வைத்து மீண்டும் பிரகாசிக்கச் செய்தார் இயக்குனர் எஸ்.ஏ. சந்திரசேகரன். குறுகிய காலத்தில் தமிழகத்தின் பேசு பொருளானார் விஜயகாந்த்.

தொடர்ந்து சாதிக்கொரு நீதி, சிவப்பு மல்லி, நீதி பிழைத்தது என சில வெற்றிப் படங்களை அளித்தார். தமிழில் அமோக வெற்றி பெற்ற ’சட்டம் ஒரு இருட்டறை’ பின்னர் ஹிந்தியில் ’அந்தா கானூன்’ என்ற பெயரில் வெளியாகி அமோக வெற்றி பெற்றது. தமிழில் விஜயகாந்த் செய்த வேடத்தை ஹிந்தியில் ரஜினிகாந்த் செய்தார். இப்படத்தில் அமிதாப்பச்சனும் ஹேமமாலினியும் நடித்தனர். ஒரே ஆண்டில் மட்டும் 18 படங்களில் நடித்து சாதனை படைத்தார் விஜயகாந்த். தயாரிப்பாளர் இப்ராஹிம் ராவுத்தருடன் நட்பு கொண்டு பல வெற்றிப் படங்களில் நடித்தார். ராவுத்தருடன் பல ஆண்டுகளாக நீடித்த நட்புடன் இருந்தவர் கெப்டன். ராவுத்தர் பிலிம்ஸ் தயாரித்த ’உழவன் மகன்’ 1984 ஒக்டோபர் 19 அன்று திரைக்கு வந்து இமாலய வெற்றி கண்டது. மக்கள் திலகம் எம்ஜியார் இப்படத்தை பார்த்து விட்டு விஜயகாந்தை நேரில் அழைத்து ராமாபுர இல்லத்தில் விருந்தளித்து பாராட்டினார்.

அநேகமாக எம்ஜியார் பார்த்த கடைசிப் படம் இதுவாகத் தானிருக்கும்.இதே ஆண்டு டிசம்பர் 24 இல் மக்கள் திலகம் எம்ஜியார் மறைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு உதவுமுகமாக ஆபாவாணன் தயாரிப்பில் அரவிந்த்ராஜ் இயக்கத்தில் ’ஊமை விழிகள்’படத்தில் நடித்து வெற்றி பெறச் செய்தார்.

இப்படத்தில் காவல் துறை அதிகாரி தீனதயாளு வேடத்தில் நடித்து அசத்தினார் விஜயகாந்த் தொடர்ந்து சத்ரியன், பரதன் கறுப்பு நிலா.தர்மா போன்ற வெற்றி படங்களை வழங்கினார். ’தங்கப்பதக்கம்’ படத்தில் காவல் துறை அதிகாரி எஸ்.பி.சௌத்ரியாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்து அசத்தினர். இப்படத்திற்கு பின் காவல்துறை அதிகாரி வேடத்திற்கு மிகப்பொருத்தமானவர் விஜயகாந்த் என பேசப்பட்டார்.

அதற்கு சான்றாக ’ஊமை விழிகள்’.சத்ரியன்’.’ராஜதுரை’சேதுபதி ஐபிஎஸ்’.வாஞ்சிநாதன்.’புலன் விசாரணை’, கெப்டன் பிரபாகரன்.நரசிம்மா’ போன்ற படங்களைக் கூறலாம். சண்டைப் படங்களில் அதிரடியாக நடித்த விஜயகாந்த் ’வைதேகி காத்திருந்தாள்’ படத்தில் வெள்ளைச்சாமி என்ற குணச்சித்ர வேடத்தில் நடித்து அசத்தினார்.

இப்படத்தின் இயக்குனர் ஆர்.சுந்தர் ராஜன் ஆர்.கே.செல்வமணியின் முதல் இயக்கத்தில் இவர் நடித்த ’புலன் விசாரணை’ பல அரங்குகளில் 200 நாட்களைக் கடந்து ஓடி சாதனை படைத்தது தொடர்ந்து வல்லரசு, ரமணா, கெப்டன் பிரபாகரன், மாநகரக் காவல், வாஞ்சிநாதன், நரசிம்மா, சேதுபதி ஐ.பி.எஸ், வானத்தைப் போல தவசி, சின்னக்கவுண்டர் என பல வெற்றிப் படங்களை தந்தார். நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் வீர பாண்டியன் படத்தில் நடித்தார். பாரதி ராஜாவுடன் தமிழ்ச் செல்வனில் கரம் கோர்த்தார். தமிழ்ச் செல்வன் படத்தில் விஜயகாந்த் அமைதியே உருவான ஐ.ஏ.எஸ் அதிகாரியாக குணச்சித்திர வேடத்தில் நடித்து பாராட்டுப் பெற்றார். கரிமேடு கருவாயன்’,அம்மன் கோயில் கிழக்காலே’ வானத்தைப் போல சொக்கத் தங்கம் தவசி’ ’சின்னக் கவுண்டர்’ போன்ற படங்களில் நடித்ததன் மூலம் கிராமத்து மக்களின் ஏகோபித்த அபிமானத்திற்குரியவரானார்.

நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் மகளும் நடிகையுமான ராதிகாவிற்கும் இவருக்கும் 80களில் சில நெருக்கம் இருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இதைத் தவிர வேறெந்த கிசுகிசுக்களிலும் சிக்காதவர் விஜயகாந்த். பின் அக்கா விஜயலட்சுமியின் அறிவுரையின் பெயரில் பின்னாளில் முறைப்படி தன் சாதியைச் சேர்ந்த பிரேமலதாவை மணந்தார் விஜயகாந்த்.

தமிழில் ’அன்னை பூமி’ என்ற முதல் 3ன் படத்தில் நடித்த பெருமை கண்டிப்பாக இவரையே சாரும். கமலஹாசன், ரஜினிகாந்த் போன்ற வசூல் நாயகர்களுக்கு இணையாக விஜயகாந்த் அதிரடி வசூல் நடிகராக பல ஆண்டுகள் கோலோச்சினார்.

(மிகுதி அடுத்தவாரம் வெளிவஜம்)

# பாலன் பிறக்காத பாலஸ்தீனம் நத்தாரா? பெரிய வெள்ளியா?

- அழகு குணசீலன் -

இஸ்ரேல் — பாலஸ்தீன (ஹாமாஸ்) போர் 2023 ஆண்டுகளாக தொடர்ந்த நம்பிக் கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. யேசு பிறந்ததாக நம்பப் படும் அன்றைய மாட்டுத்தொழுவம் இன்றைய பிறப்பு தேவாலயம் பெத்த லேகத்தில் உள்ளது. நத்தார் பண்டிகை யின் வாடை அங்கு வழமை போல் இல்லை.

பாலன் பிறந்த தினத்தில் பாலஸ்தீன சிறார்கள் கொன்று குவிக்கப்படும் போது எங்களுக்கு என்ன நத்தார் வேண்டிக் கிடக்கிறது….? என்று கேட்கிறார் ஒரு பாலஸ்தீன கிறிஸ்த்தவ தாய். கொலை செய்யப்பட்ட பாலஸ்தீன சிறார்களின் நினைவுகளை சுமந்து நாங்கள் அதனை அமைதியாக அனுட்டிக்கவுள்ளோம் என்று தொடர்ந்து பேசுகிறார் அவர்.

இஸ்ரேலால் இயேசுவின் போதனைகள் கொல்லப்பட்ட நாள்….!

கடந்த ஒக்டோபர் 7ம் திகதி ஹாமாஸ் தீவிரவாத அமைப்பு இஸ்ரேலில் பொது மக்கள் மீது நடாத்திய பயங்கரவாத தாக்குதலை அடுத்து இஸ்ரேல் பாலஸ் தீனம் (ஹாமாஸ்) மீதான யுத்தத்தை பிரகடனம் செய்தது. இஸ்ரேல் இதனை ஹாமாஸ்க்கு எதிரான போராக குறிப்பிட் டாலும் இது பாலஸ்தீன மக்களுக்கு எதிரான போர். இலங்கையில் 'புலிகளு க்கு எதிரான போர் என்ற வார்த்தையின் அகராதி அர்த்தத்தைப் புரிந்து கொண்ட ஈழத் தமிழர்களுக்கு இந்த வலி தெரியும். இலங்கையில் ஒட்டு மொத்த தமிழர்களும் புலிகளான கதை தான் ஒட்டு மொத்த பாலஸ்தீனர்களை யும் ஹாமாஸாக்கி இருக்கின்றது.

போராட்ட அமைப்புக்களின் பயங்கரவாத த்தை விடுதலையின் போர்வையில் நியாயப்படுத்த முடியாது. அதேபோல் பயங்கரவாத அமைப்புக்களுக்கு எதிரான போர் என்ற தொனியில் இடம்பெறும் அரச பயங்கரவாதத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது. யுத்தம் என்றால் அங்கு முதலிலும் அதிகமாகவும் பாதிக் கப்படுபவர்கள் பிள்ளைகளும் பெண் களும் தான். இதற்கு பாலஸ்தீனம் மட்டும் விதிவிலக்காக இருக்க முடி யுமா என்ன…?

ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை கூட்ட த்தில் யுனிசெப் தலைவி கத்தரின் றூஸல் வெளியிட்ட தகவல்களும், புள்ளி விபரங்களும் அதிர்ச்சியளிக்கின்றன. ஒக்டோபர் 7ம்திகதி முதல் இது வரை 20.000க்கும் அதிகமானோர் பாலஸ் தீனத்தில் ஹாஸாவில் கொல்லப்பட்டு ள்ளனர். 53.000 பேர் காயமடைந்துள்ள னர். கொல்லப்பட்டவர், காயப்பட்டவர் களில் 5.300 பேர் பிள்ளைகள். இது கொல்லப்பட்டவர்களில் 40 வீதம் என் கிறார் றூஸல். இது ஒக்டோபர் 7 முத லான கடந்த 20.12.2023 புதன்கிழமை வரையான நாளாந்த சராசரி கணக்கில் நாளொன்றுக்கு 115பிள்ளைகள் கொலை செய்யப்படுகின்றனர்.

இப்போது அந்த பாலஸ்தீன கிறிஸ்தவ தாய் பாலன் பிறந்த தினம் எங்கள் பிள்ளைகளின் நினைவுதினம் என்பதன் வலியை எவராலும் உணர்ந்து கொள்ள முடியும். யுனிசெப் அறிக்கை படி 1.200 பிள்ளைகளைக்காணவில்லை இவர்கள் இஸ்ரேலின் விமான, தரைமார்க்க அரச பயங்கரவாத தாக்குதல்கள் மூலம் தகர்க்கப்பட்ட கட்டிட இடிபாடுகளுக் குள் சிக்கியிருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. இந்தப் புள்ளி விபரங் களை இஸ்ரேலும், ஹாமாஸூம் கூட்டிக் குறைத்து பிரச்சாரம் செய்து வருகின்ற னர்.

பட்டினி வளர்ந்தவர்களை விடவும் பிள்ளைகளை சாகடிக்கிறது. ஹாஸா மீதான பொருளாதாரத்தடை ஒரு மில்லி யனுக்கும் அதிகமான பிள்ளைகளுக்கு உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்தி உள் ளது. இதனால் தான் வாயாளவான உங்கள் அரசியல் இராஜதந்திர வார்த் தையாடல்களால் பாலஸ்தீனத்தை சாக டிக்க வேண்டாம் என்ற தொனியில் பாதுகாப்புச்சபையை எச்சரித்திருக்கிறார் றூஸல். பாலஸ்தீனத்தின் இன்றைய தேவை தற்காலிக இடைவேளை அல்ல ஒரு முழுமையான யுத்த ஓய்வு என்பது அவரின் கருத்தாக உள்ளது. பாது காப்புச்சபையில் இதுவரை பல தடவை கள் அமெரிக்கா தனது வீட்டோவைப் பயன்படுத்தி இஸ்ரேலுக்கு தனது விசு வாசத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மேற்குலக அமெரிக்க இஸ்ரேல் சார்பு நிலைப்பாட்டில் றூஸலின் கருத்து எந்தளவுக்கு பாதுகாப்பு சபையின் பிரே



ரணை ஒன்றை நிர்ணயிக்கும் வல்லமை கொண்டது ….? ஆனால் மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை வேண்டி நிற்கின்ற அமெரிக்க அணிசாராத நாடுகளின் காதுகள் றூஸலின் கருத்துக்கு திறந்தி ருக்கின்றன என்று நம்பலாம்.

உக்ரைன் ரஷ்ய சண்டையில் உலகை இலகுவாக திசைதிருப்பியது போன்று பாலஸ்தீன விடயத்தில் அமெரிக்காவால் செயற்பட முடியாது. ஹாமாஸை பண யக் கைதிகளின் விடுவிப்புக்கு இணங்க வைப்பதற்கு மனிதாபிமான உணவு விநியோகத்தை பேரம் பேசுகின்றன அமெரிக்காவும் இஸ்ரேலும். உக்ரைன் க்கு ஆயுதம் வழங்குவதில் குடியரசு கட்சியினரை ஒரு வழிக்கு கொண்டு வருவதற்கு பாலஸ்தீனத்தில் அமைதி நிலவுவதாக காட்டவேண்டிய தேவை ஜோ பைடனுக்கு உண்டு.

இந்த நிலையில் உக்ரைனில் இராணுவ த்திற்கு ஆள் தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது. இந்த நிலையில் தப்பிச் சென்று வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள் ளார்களை அந்த நாடுகள் உக்ரைனிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக் கையை அதிபர் ஷெலன்ஸி விடுத்து ள்ளார். ஜேர்மனியில் மாத்திரம் இரண்டு இலட்சம் ஆண்கள் இராணுவ சேவை க்கு மறுப்பு தெரிவித்து தஞ்சம் அடை ந்துள்ளனர். இவர்கள் கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்று ஜேர்மனி அறிவித்துள்ளது. ஆட் தட்டுப்பாடு காரணமாக எல்லைப் பிரதேசங்களான கீயு, டொன்பாஸ் போன் றவற்றை ரஷ்யாவிடம் விட்டு விட்டு வெளியேறும் யோசனை பற்றியும் உக் ரைன் ஆய்வாளர்கள் பேசுகிறார்கள். இது நடந்தால் அது உக்ரைனின் தோல்வி அல்ல, அமெரிக்காவின் தோல்வி இதனால் பாலஸ்தீனத்தில் கைதிகளை விடுவித்து ஒரு சமாதான படத்தை காட்ட அமெரிக்கா முயல் கிறது. இது அமெரிக்கா தனது வளங் களையும், கவனத்தையும் உக்ரைன் நோக்கி அல்லது ரஷ்யாவுக்கு எதிராக பயன்படுத்த வசதியாக அமையும் என நம்பப்படுகிறது.

யேசு பிறந்த போது 2023 ஆண்டுகளு க்கு முன்னர் வானில் வால்வெள்ளி தோன்றியதாக நம்பப்படுகிறது. யூதராகப் பிறந்த யேசுவின் வாழ்வியலை ஏற்றுக் கொண்ட இஸ்ரேல் யூதர்களும் இதை நம்புகிறார்கள். ஆனால் வானில் இன்று இஸ்ரேலின் குண்டுகளும், ஹாமாஸின் ராக்கட்டுக்களும் தான் மின்னுகின்றன. வால் வெள்ளியை பார்த்து மூவேந்தர்கள் பெத்தலேகம் நோக்கி அதிசயத்தை அறிய வந்தார்கள். கஸ்பர்,மில்சோர், பால் தசார். இவர்களில் ஒருவர் கறுப்பராம்.

இப்போது இத்திசை நோக்கி இஸ்ரே லின் யுத்த முனைப்புக்கு பின்னணியில் இருக்கும் மேற்குலக தூதுவர்கள் வருகிறார்கள். சண்டையை இஸ்ரேல் நிறுத்தக்கூடாது. உணவுப் பொருட் களின் விநியோகம் மட்டும் செய்யப் பட்டால் சரி. ஹாமாஸ் பணயக்கைதி களை விடுதலை செய்ய வேண்டும் இந்த மாவைத்தான் திருப்பித் திருப்பி அரைக்கிறார்கள். இவர்களில் ஒருவர் கறுப்பர். ஆபிரிக்க அமெரிக்கரான அமெ ரிக்க பாதுகாப்பு அமைச்சர். ஆனால் அவர் பேசுவது யுத்த தந்திர உபாயம். இஸ்ரேல் ஹாமாஸை வெற்றி கொள்வ தற்கான இராணுவ ஆலோசனை. இயேசு வின் பிறப்புச்செய்திக்கு எதிர்மாறானது.

கிட்லரின் சர்வாதிகார ஆட்சியில் யூதர்கள் மீது இன் அழிப்பு மேற் கொள்ளப்பட்டது என்ற ஒரேயொரு கார ணத்திற்காக இஸ்ரேலால் செய்யப்படும் அனைத்து செயற்பாடுகளையும் மேற்கு லகம் அங்கீகரிப்பது எந்தளவுக்கு நியாய மானது? இன அழிப்பை அனுதாப முதலீடாகக் கொண்டு இன்னொரு பாலஸ்தீன மக்களை, அவர்களின் இறைமையை இஸ்ரேல் மறுப்பதை, அழிப்பதை மேற்குலகம் அங்கீகரிப்பது அநீதியானது.

இஸ்ரேல் அமைக்கப்பட்டபோது 7 வீத மான பாலஸ்தீன நிலத்தைக் கொண்டி ருந்த இஸ்ரேல் இன்று 93 வீதமான நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ளது. அன்று 90 வீதமான பாலஸ்தீன மண்ணு க்கு சொந்தக்காரர்களான பாலஸ்தீன மக்கள் இன்று வெறும் 4 வீத நிலப் பரப்பில் ஹாஸாவிலும் மேற்கு கரை யிலும் முடங்கிக் கிடக்கின்றனர். இந்த நில ஆக்கிரமிப்புதான் இஸ்ரேல் பாலஸ் தீன பிரச்சினையின் அடிப்படை எனத் தெரிந்தும் அதை தீர்த்து வைக்காது, யுத்தத்திற்கு ஆதரவளிக்கின்ற போக்கே மேற்குலகில் நிலவுகிறது. பாலஸ்தீன மக்களின் இழப்பில் இவர்கள் தங்கள் அரசியலை செய்கிறார்கள்.

அநியாயங்களை எதிர்த்து போராடியதற் காக இயேசு கொடுங்கோலாட்சியினரால் சிலுவையில் அறையப்பட்டார். யேசுவின் வழியில் வந்த இஸ்ரேல் பாலஸ்தீனத் தீனர்களை சிலுவையில் அறைந்து கொண்டிருக்கிறது. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் திருப்பிக் கொடுங்கள் என்ற வார்த்தை கள் அர்த்தமற்றவையாகி விட்டன. இஸ்ரேலை பாலஸ்தீனர்கள் கன்னத்தில் அறைய விட்டு மறு கன்னத்தில் அடிக் கிறது அமெரிக்கா. இதனால் நத்தார் பாலஸ்தீனர்களுக்கு சமாதானத்திற்கான கிறிஸ்துமஸ் அல்ல உலகம் கிறிஸ்து மஸ் கொண்டாடிக் கொண்டிருக்கும் போது பாலஸ்தீன மக்கள் சிலுவையில் அறையப்பட்டு கொண்டிருக்கிறார்கள். இதனால் இம்முறை நத்தார் பாலஸ்தீனர் களுக்குபெரிய வெள்ளி. இயேசு சிலுவை யில் அறையப்பட்ட தினம்.



# ஈழத்தமிழராகப் பிறந்து தமிழ்த் திரையுலகில் நகைச்சுவை நடிகராக கோலோச்சிய போண்டா மணி

தென்னிந்திய சினிமாவில் நகைச்சுவை நடிகராக இருந்த ஈழத்தை பிறப்பிடமாகக் கொண்ட போண்டா மணி கடந்த ஓராண்டாக உடல் நலக்குறைவால் அவதிப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 23 டிசம்பர் 2023 உயிரிழந்த இந்த நகைச்சுவை நடிகரின் வாழ்க்கையைப் பற்றி தெரிந்து கொள்கையில் அவருக்கும் இலங்கைக்கும் ஈழத்திற்குமான தொடர்புகள் அனைவரையும் ஆச்சர்யப்பட வைக்கின்றதென்று தான் சொல்ல வேண்டும்.

ஈழத்தில் பிறந்த போண்டா மணி, இவருடன் 16 பேர் பிறந்துள்ளனர், ஈழத்தை உலுக்கிய இனக்கலவரம் இந்தப் பெரிய குடும்பத்தையும் விட்டு வைக்கவில்லை, ஈழத்தில் நடந்த இனக்கலவரத்தில் இவரது குடும்பத்தை சேர்ந்த, 8பேர் இறந்து போயுள்ளனர்.





அது மாத்திரமன்றி அவரது தாய்-தந்தையர் கூட இலங்கை போரில் உயிரிழந்துள்ளனர், மேலும் இந்தக் கலவரத்தில் போண்டா மணியின் இரண்டு கால்களிலும் குண்டடி பட்டுள்ளது. அதில் ஒரு காலில் இருந்த குண்டினை அறுவை சிகிச்சை மூலம் அகற்றியுள்ளதாகவும், இன்னொரு காலில் இருந்து குண்டை அகற்ற முடியாததால் நடக்க முடியாத நிலைக்கு சென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்படி போரினால் பாதிக்கப்பட்ட போதிலும், அந்த இயலாத காலுடன் ஊர் ஊராகச் சென்று கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தனது குடும்பத்தினரை காப்பாற்றியுள்ளார்.

குடும்பத்தை காப்பாற்ற வேண்டிய சூழலின் மத்தியில், தமிழ் சினிமாவில் பிரபல நகைச் சுவை நடிகரான போண்டா மணி இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு சென்றுள்ளார்.

பின்னர் இவர், 1991ஆம் ஆண்டு பாக்யராஜின் பவுனு பவுனுதான் படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தில் அறிமுகமானார். அதனைத் தொடர்ந்து ரஜினிகாந்தின் முத்து உள்ளிட்ட சில திரைப்படங்களில் போண்டா மணி தலைகாட்டி இருந்தாலும், விவேக்குடன் இணைந்து நகைச் சுவைக் காட்சிகளில் நடிக்க தொடங்கிய பிறகு, தனக்கான ஒரு அடையாளத்தை உருவாக்கிக் கொண்டார்.

ரசிகர்களை தனது நகைச்சுவை திறனால் மகிழ்வித்த போண்டா மணி ஒரு படப்பிடிப்பின் போது சாக்கடையில் விழுந்ததில், கழிவுநீரை பருகும் சூழல் உருவானது. இதனால் அவரது இரு சிறுநீரகங்களுக்கும் கடும் பாதிப்பு ஏற்பட்டது, இதன் காரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் போண்டா மணி அனுமதிக்கப்பட்டார். இதனையடுத்து மருத்துவமனையில் மாதம் ஒருமுறை மருத்துவமனைக்குச் சென்று டயாலிசிஸ் செய்து வந்துள்ளார்.

அவருக்கு சில சினிமா நட்சத்திரங்கள் நிதி உதவி அளித்த நிலையில், கடுமையான போராட்டத்திற்கு பின் போண்டா மணி மீண்டு வந்தார், நீண்ட ஓய்வுக்குப் பின் தேறி வந்த போண்டா மணி, அதன் பின் மீண்டும் படங்களில் நடிக்கத் தொடங்கினார்.

இருப்பினும் அவரது உடல்நிலை அதற்கு ஒத்துழைக்காத போதும், குடும்ப சூழல் காரணமாக வாய்ப்புகளை தேடிக் கொண்டிருந்தார், இந்நிலையில் 23 டிசம்பர் 2023 இரவு 11.00 மணியளவில் பல்லா வரத்தில் உள்ள வீட்டில் மயங்கி விழுந்துள்ளார். பதறிப் போன குடும்பத்தார் உடனடியாக அவரை குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர், அவரை பரிசோதித்த வைத்தியர்கள், அவரது இரு சிறுநீரகங்களும் செயல் இழந்ததாகவும், அதன் காரணமாக ஏற்கனவே உயிர் பிரிந்ததாகவும் தெரிவித்தனர். ஈழத்தில் பிறந்து தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்த போண்டா மணியின் உயிரிழப்பு அவரது குடும்பத்தினரையும், திரையுலகினரையும் ரசிகர்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளமை குறிப்பிடத் தக்கது.




வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# கொழும்பில் அமையவுள்ள இந்து சமுத்திர பாதுகாப்பு நிலையம் இலங்கைத்தீவின் பாதுகாப்புக்கானதா?

தென்னிலங்கை அரசியலின் இருப்பென்பது, அதன் தந்திரோபாயத்தின் நகர்வுகளிலேயே உள்ளதாக இப்பகுதியில் பல தடவை வலியுறுத்தியுள்ளது. அத்தகைய தந்திரத்தின் மூலமே இலங்கைத்தீவின் அரசியல் செயல் பூர்வமானதாக நகர்கிறது. தென்னிலங்கை ஆட்சியாளர்கள் காலத்திற்குக் காலம் நெருக்கடிகளை எதிர் கொள்வதும் அதனை வெற்றி கொள்ள முனைவதும் வழமையான அரசியலாக இயங்குகிறது.

அத்தகைய போக்கில் ஈழத்தமிழர் மட்டுமல்ல இந்தியாவும் ஏனைய வல்லரசுகளும் தென்னிலங்கை ஆட்சியாளரின் நலன்களுக்குள் அகப்பட்டு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். அவ்வகையான நடவடிக்கையில் ஒன்றாகவே இந்து சமுத்திர பிராந்தியத்திற்கான பாதுகாப்பு தலைமையகத்தினை இலங்கையில் நிறுவுவதற்கான தீர்மானம் ஒன்றினை இந்து சமுத்திர பிராந்திய நாடுகள் மொரீசியஸில் கூடிய மகாநாட்டில் முன்னெடுத்துள்ளன.

இக் கட்டுரை தென்னிலங்கை ஆட்சியாளர்கள், இந்து சமுத்திர பிராந்திய அரசியலில் ஈடுபடுவதன் மூலம் உள்நாட்டரசியலை வெற்றி கொள்ளும் உபாயத்தினை புரிந்துகொள்ள முயல்கிறது. இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க முன்வைத்த பிரேரணையை மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் அங்கீகரித்தன.

இந்தியா, ஆபிரிக்க நாடுகள் மற்றும் தெற்காசிய நாடுகளின் பிரதிநிதிகள் ஒப்புதலளித்தன. அதன் பிரகாரம் இந்து சமுத்திர நாடுகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கையை மையமாகக் கொண்டு செயல்பட இந்துச் முத்திர நாடுகள் தீர்மானித்துள்ளன. இத்தகைய இந்து சமுத்திர பாதுகாப்புத் தலைமையகம் ஜனவரி மாதம் 2024 இல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிறுவப்பட்டு பின்னர் கொழும்பில் நிரந்தர



கட்டிடத் தொகுதியில் நிலையம் தனது பணிகளை மேற்கொள்ள நிறுவப்படும் எனவும் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

இந்தியா ஒரு பிராந்திய தலைவர் மாத்திரமல்ல அதன் அண்டை நாடுகளுக்கு மிக முக்கியமான உயிர்நாடி என இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அண்மையில் (19.12.2023) தெரிவித்துள்ளார். இலங்கை சமீபத்தில் எதிர் கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது இது வெளிப்பட்டது எனவும் தெரிவித்தார். இது அயல் நாடுகளுக்கு சிறந்த செய்தியை வெளிப்படுத்துகின்றது என்றார்.

இந்த இரு செய்திகளும் இந்து சமுத்திர பிராந்தியம் சார் கருத்துநிலை அரசியலாகவே உள்ளது. இந்து சமுத்திரமே இலங்கையின் அரசியல் பலமாகும். இந்து சமுத்திரத்தை மையப்படுத்தியே இலங்கையின் இருப்பு மட்டுமல்ல உலகளாவிய வல்லரசு நாடுகளது கவனத்தை குவித்து வைத்துள்ளது. தவிர்க்க முடியாது இலங்கை அரசியலோடு உலகளாவிய அரசியல் கலக்க வேண்டிய நிலையிலுள்ளது. இதுவே இலங்கை ஆட்சியாளருக்கான பலமாகும்.

அது பொருளாதார நெருக்கடியாயினும் அர சியல் நெருக்கடியாயினும் உலக நாடுகள் இலங்கையின் ஆட்சியாளர்களை பாதுகாப்பதில் கவனம் கொண்டிருப்பதை கண்டு கொள்ள முடிகிறது. 1971 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் நடைபெற்று



முடிந்த ஆயுதப் போராட்டமும் 2009 இல் வடக்கு, கிழக்கில் நடைபெற்று முடிந்த ஆயுகுப் போராட்டமும் உலக நாடுகளின் ஆதரவுடனேயே சாத்தியமானது. அதற்கான அடிப்படை இந்து சமுத்திரத்தின் மத்தியில் இலங்கைத்தீவு அமைந்திருந்தமையே காரணமாகும். அதன் நீட்சியாகவே இந்து சமுத்திர பாதுகாப்பு நிலையம் கொழும்பில் திறப்பதற்கான முன் மொழிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் தென்னிலங்கை ஆட்சிக்கு கிடைக்கவுள்ள சாதகமான நிலைகளை விரிவாக நோக்குவது பொருத்தமானதாக அமையும்.

ஒன்று, இந்து சமுத்திர நாடுகளை இலங்கை நோக்கி ஈர்ப்பதில் இந்து சமுத்திர பாதுகாப்பு நிலையம் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு உதவப் போகிறது. காரணம் பொருளாதார நெருக்கடியைக் கடந்து அரசியல் ரீதியான நெருக்கடியை இலங்கைத்தீவு எப்போதும் எதிர் நோக்குகிறது. உள்நாட்டு அரசியலை விட பிராந்திய, சர்வதேச அரசியல் சக்திகளின் தலையீட்டை எதிர்கொள்ளும் நிலை தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு உண்டு. அதனை தவிர்ப்பதென்பது கடினமான இலக்காகவே உள்ளது. தவிர்க்க முடியாத அமைவிடத்தில் இலங்கைத்தீவு காணப்படுகிறது. எப்போதும் இலங்கை மீதான அரசியலில் உலகளாவிய சக்திகள் கவனம் கொள்ள முடியும் என்ற நிலையை புரிந்துள்ள தென்னிலங்கை அதனைத் தவிர்ப்பதற்கே முனைகிறது. அதற்கான கூட்டுகளையும் அணிகளையும் பலப்படுத்துவதுடன், அவற்றின் ஒத்துழைப்பின் மூலம் இலங்கைத் தீவின் இருப்பினை பாதுகாக்க முனைகிறதாகவே தெரிகிறது.

இரண்டு, இந்தியாவின் பலமான ஆட்சி சாத்தியமாகும் சூழல் நீடிப்பதற்கான வாய்ப்பு அதிகமாகவே தென்படுகிறது. அத்தகைய ஆட்சியின் இருப்பு சீனாவுடன் இலங்கைத்தீவு கொண்டுள்ள நெருக்கத் தினால் அதிக முரண்பாட்டினை எதிர்காலத்தில் எதிர்கொள்ள வாய்ப்புள்ளது. அதுவும் இந்தியத் தேர்தலை அடுத்து அமையவுள்ள பலமான ஆட்சி நிச்சயமாக நெருக்கடியை இலங்கைத் தீவுக்கு கொடுக்க வாய்ப்பு அதிகமுள்ளதாகத் தெரிகிறது.

அதனை சரிவர அடையாளம் கண்டுள்ள தென்னிலங்கை ஆட்சியாளர்கள் செயல்பட ஆரம்பித்துள்ளதாகவே தெரிகிறது. அதிலும் இந்தியா இலங்கையின் வடக்கு, கிழக்குடன் கொண்டுள்ள நெருக்கம் புதியதிசையை நோக்கி செயல்பட முனைவதாகவே தெரிகிறது. அதனை வெற்றி கொள்ள இந்து சமுத்திர பாதுகாப்பு நிலையம் உதவக் கூடியதாக தெரிகிறது. இது இந்து சமுத்திரத்தை பாதுகாக்கிறதோ இல்லையோ இலங்கைத்தீவை இந்தியாவின் அணுகுமுறைகளிலிருந்து பாதுகாக்க உதவக்கூடியதே. ஆனால் இதில் ஒரு குழப்பம் ஏற்படலாம். அதாவது இந்தியாவும் அத்தகைய பாதுகாப்பு நிலையம் கொழும்பில் அமைய முன்மொழிந்துள்ள நாடுகளில் உள்ளடங்குகின்றது என்பதாகும்.

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –




இதனை ஆபிரிக்காவிலோ அல்லது பிற ஆசியாவிலோ நிறுவ முனைவதற்கான உரையாடல் எழுவதற்கு முன்பே ,இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் முன்மொழிவை வெளிப்படுத்தி விட்டார். அதனை இந்தியா எதிர்க்க முடியாது உடன்பாடு எட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது மட்டுமல்லாது இதனால் இந்தியாவுக்கு இலாபகரமான பகுதியும் ஒன்றுள்ளது எனவும் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் கருதுகின்றனர். காரணம் இலங்கைத்தீவில் சீனாவின் பிரசன்னத்தை குறைந்த பட்சம் கண் காணிக்க முடியுமெனவும் இந்து சமுத்திரத்தை பாதுகாக்கும் முனைப்பில் இந்தியாவும் இலங்கையும் ஒன்றிணைந்து பயணிக்க முடியுமெனவும் இந்தியத் தரப்பு கருதுகிறது. இது இலங்கைத்தீவின் மீதான நெருக்கத்தை சாத்தியப்படுத்த முடியுமென இந்தியா கணிப்பிட்டுள்ளது. இந்தியாவை பொறுத்தவரை இலங்கைத் தீவை முழுமையாக செல்வாக்குச் செலுத்துவதே நோக்கமாகும்.


(22ம் பக்கம் பார்க்க)



# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! தடைபட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.. உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்





ரிஷபராசி அன்பர்களே! வீண் மனகுழப்பம் ஏற்பட்டு நீங்கும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் பெற முடியும். உத்யோகத்தில் கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினருடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.





மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் குறித்த காலத்தில் வெற்றி பெறும். மனம் ஒருநிலைப்படும். கவுரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமானபோக்கு காணப்பட்டாலும் பணவரத்து குறைவு இருக்காது.தொழிலில் கூட்டாளிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! மனோதைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும்.





சிங்கராசி அன்பர்களே! மனகுழப்பம் நீங்கும். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். பணியாளர்கள் உதவியும் கிடைக்கும்





துலாம்ராசி அன்பர்களே! சுபச் செலவுகள் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.





விருச்சிகராசி அன்பர்களே! மன நிம்மதி கிடைக்கும். புத்திசாதூர்யம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் பெறவும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யவும் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.








தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாட்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப் படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. தன்மையாக பேசுவது நல்லது.




கும்பராசி அன்பர்களே! சுபச் செலவுகள் உண்டாகும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! எல்லாவிதமான முன்னேற்றமும் ஏற்படும். பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

## தமிழரசுக்கட்சிக்கான புதிய தலைமை

(7ம் பக்கத் தொடர்ச்சி) பொறுப்புகளை ஏற்பவர் தன்னை மற்றவர்களை விடவும் தகுதியானவராகக் காண்பித்துக் கொள்ளும் நோக்கில் சில செயல்பாடுகளை முன்னெடுப்பதுண்டு. அந்த வகையில் புதிதாக தெரிவு செய்யப்படுபவர் அனைத்து கட்சிகளுடனும் ஐக்கியமாக செயல்படக்கூடிய கரிசனையும் ஈடுபாடும் கொண்டிருந்தால் அது சிறப்பானது. அதுதான் இப்போது மக்களுக்கும் தேவையானது

## பிரான்ஸில் சட்டவிரோதமாக குடியேறிய

(7ம் பக்கத் தொடர்ச்சி) மேற்கொண்டனர். துபாயில் இருந்து ஒரு விமானத்தில் 300க்கும் மேற்பட்ட இந்தியர்கள் நிக்கரகுவா நாட்டிற்கு செல்வது குறித்து சந்தேகமடைந்த பிரான்ஸ் பொலிஸார் விசாரணை நடத்தினர். 300க்கும் மேற்பட்ட இந்தியர்கள் துபாயில் இருந்து ஒரே விமானத்தில் வெளிநாட்டிற்கு செல்வது மனித கடத்தல் தொடர்பாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பிரான்ஸ் பொலிஸார் விசாரணை நடத்தி அவர்களைத் திருப்பி இந்தியாவுக்கு அனுப்பியுள்ளனர்.

## என் மீது மக்கள் அதிருப்தி!

(22ம் பக்கத் தொடர்ச்சி) 4ம் திகதி வரையில் ஜமெய்க்காவில் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.கடந்த ஆண்டிலும் பிரதமரும் அவரது குடும்பத்தினரும் ஜமெய்க்காவிற்கு விஜயம் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. விமானப் பயணக் கட்டணங்கள் உள்ளிட்ட இந்த விடுமுறை பயணத்திற்கான செலவுகளை அரசாங்கத்திற்கு பிரதமர் குடும்பம் மீள செலுத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் அலுவலகம் இது தொடர்பில் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

## கொழும்பில் அமையவுள இந்து சமுத்திர

(21ம் பக்கத் தொடர்ச்சி) அத்தகைய முனைப்புடனேயே கடந்த 70 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்திரா காந்தி கூட முழு இலங்கையையும் இந்தியாவின் கட்டுப்பாட்டில் கொண்டுவர முயன்று தோற்றுப் போனதுடன். வடக்கு, கிழக்கு மீதான ஈடுபாட்டை அதிகரிப்பதன் மூலம் தென்னிலங்கை மீது செல்வாக்குச் செலுத்த முடியுமென கணிப்பிட்டார்.

ஆனால் நடைமுறை தலைகீழானது. அத்தகைய கொள்கையே அவரது இருப்புக்கு நெருக்கடியாக அமைந்தது. அதுவே ராஜீவ் காந்தியின் அரசியலிலும் நிகழ்ந்தது. இந்தியாவின் கணிப்புகள் எல்லாவற்றையும் எண்ணிக் கொண்டே இலங்கை ஆட்சியாளர்கள் கடந்து கொண்டு செயல்படுகின்றனர். இது இலங்கை ஆட்சியாளர்களின் உபாயமாகவே தெரிகிறது

எனவே இந்து சமுத்திர அரசியல் சுழிக்குள் வீழ்ந்து போயுள்ள அரசியல் தலைமைகளின் முன்பே அதனை வெற்றிகரமாக நகர்த்தும் தென்னிலங்கை ஆட்சியாளர்களையும் கண்டு கொள்ள முடிகிறது. அதில் ஜே.ஆர்.ஜெயவர்தனவுக்குப் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே அத்தகைய தந்திரம் வலிமையாக உள்ளது. அதனையே மீண்டும் ஒரு தடவை நிறுவியுள்ளனர். மகிந்தராஜ பக்ஷக்களும் விடுதலைப்புலிகளும் இந்து சமுத்திர அரசியல் அலைக்குள் வீழ்ந்து மூழ்கிப் போக ரணில் விக்கிரமசிங்க அதற்குள் தனது அரசியல் சாதனையை வெற்றிகரமாக அடைந்து வருகிறார்.

அத்தகைய முனைப்பில் ஒன்றாகவே இந்து சமுத்திர பாதுகாப்பு நிலையம் கொழும்பில் அமைவதற்கான முன்மொழிவாகும். இது இயற்கை சீற்றத்திலிருந்தும் அழிவுகளிலிருந்தும் இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதைக் கடந்து இலங்கைத்தீவின் அரசியலை பாதுகாப்பதாகவே தெரிகிறது. இதுவே ஈழத்தமிழர்களின் தோல்வியுமாகும்.

அதாவது இந்து சமுத்திர அரசியலை கண்டு கொள்ளாத ஈழத்தமிழரது அரசியல் அழிவையே தமிழ் மக்களுக்கு எச்சமாக்கியுள்ளது. இதுவே தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கும் ஈழத்தமிழர் அரசியல் தலைமைகளுக்கும் உள்ள வேறுபாடாகும்.

## புலிச் சின்ன ரீசேட் அணிந்து கைதான

(24ம் பக்கத் தொடர்ச்சி) இளைஞரை விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியை பெறுவதற்கான விண்ணப்பத்தை மன்றில் தாக்கல் செய்திருந்தார். பயங்கரவாத தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞனை பிணையில் விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த இளைஞனை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

## ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் ஒரு கண் துடைப்பு

(3ம் பக்கத் தொடர்ச்சி) (இராணுவத்துக்குச் சொந்தமான குறித்த வாகனத்தின் பதிவிலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.) அது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் 2009 மே மாதம் 18ஆம்திகதி தம்மிடம் சரணடைந்து காணாமல் போன நூற்றுக்கணக்கான தமிழர் களை அவர்களை அழைத்துச் சென்ற பேருந்து (பதிவிலக்கமின்றி) கண்டறிய முடியாது என இராணுவம் கூறியது. அது மாத்திரமன்றி 1989 ஆம் ஆண்டு இராணுவத்தைச் சேர்ந்த சீருடை யணியாத சுமார் 3040 பேரால் அழைத்துச் செல்லப்பட்ட தனது 20வயது மகன் காணாமல் போனமை குறித்து முறைப்பாடளிப்பதற்கு கலகெதர பொலிஸார் அனுமதியளிக்கவில்லை என தாயொருவர் தெரிவித்துள்ளார் என்றுள்ளது

## கருணையாளர்களின் கவனத்திற்கு!

அன்பு இல்லக் குழந்தைகளுக்கு 2024 ஜனவரி 10ம் திகதி முதல் 31ம் திகதி வரை உணவளிக்கவுள்ள கருணையாளர்கள் தயவு செய்து 10 ஜனவரி 2024 திகதிக்கு முன்னதாக தங்கள் விபரங்களைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். காரணம் பெரிதாக ஒன்றுமில்லை. இரு வார கால விடுமுறை தேவைப்படுகின்றது. அனைத்துச் செயற்திட்டங்களும் வழமை போன்று நடைபெறும். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



FREE ENTRY

30 DEC - 2023 @ 5:15PM

Gabby's ஆதரவில்

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் கனடா
பெருமையுடன் வழங்கும்

# பூவரசம் பொழுது

POOVARASAM POZHUTHU 2023

CHINESE CULTURAL CENTRE
5183 SHEPPARD AVE E, SCARBOROUGH, ON M1B 5Z5
www.Pungudutivuworld.com














# வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது குறித்த இந்தியாவின் கரிசனைகளை இலங்கை கேட்க வேண்டும்

வெளிநாட்டு கப்பல்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது குறித்த இந்தியாவின் கரிசனைகளை இலங்கை செவிமடுக்க வேண்டும் என இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரஅமைச்சர் எம்ஜே அக்பர் தெரிவித்துள்ளார். இந்தியாவும் சீனாவும் உண்மையில் இன்னமும் இராணுவமோதலில் ஈடுபட்டுள்ளன, எல்லைதகராறு தீர்க்கப்படாததால் இதற்கு இன்னமும்தீர்வு காணப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். ஆகவே நாங்கள் விசேட கரிசனைகளை கொண்டுள்ளோம் என இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தெரீவித்துள்ளார்.

உங்களிற்கு தெரியும் இவை சுற்றுலா ஆடம்பர கப்பல்கள் இல்லை இவை சீன கப்பல்கள் என தெரிவித்துள்ள அவர் நாங்கள் மின்னணுசாதனங்களிற்கு மீண்டும் திரும்பியுள்ளோம் அவை மூலோபாய நலன்களின் அடிப்படை தேவைகள் எனவும் தெரிவித்துள்ளார். இந்தியாவின் வடபகுதியில் இமாலயத்தில் சீனாவுடனான இந்தியாவின் மோதல் ஒரு கடுமையான யதார்த்தை எதிர் கொள்கின்றது என தெரிவித்துள்ள இந்தியாவின் முன்னாள்



வெளிவிவகார அமைச்சர் அமைதி ஸ்திரதன்மைக்கு அடிப்படையான 1980களில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை நாங்கள் இன்னமும் மதிக்கின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எல்லையில் பதற்றம் நிலவுகின்றது ஆனால் துப்பாக்கி வேட்டுக்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளதுடன் இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்டவர்களிற்கு இந்தியா புகலிடம் வழங்குவது குறித்த விசேட கரிசனைகளை கொண்டுள்ளன இதே போன்று எங்கள் கரிசனைகளை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜப்பானிய நிதியமைச்சர் சுனிச்சி சுசுகி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார். எதிர்வரும் ஜனவரி மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் அவர் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜப்பானிய தூதரகம் அறிவித்துள்ளது. இந்த விஜயத்தின் போது இலங்கை யின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜப்பானிய நிதியமைச்சர் கலந்துரையாட உள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## புலிச் சின்ன ரீசேட் அணிந்து கைதான இளைஞன் பிணையில் விடுதலை!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரது படம் மற்றும் புலிச் சின்னம் பொறித்த ரிசேர்ட் அணிந்து மாவீரர் தினத்தில் பங்கெடுத்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞன் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தினால் 27 டிசம்பர் 2023 பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி கொடிகாமத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் தலைவரது புகைப்படம் தாங்கிய ரிசேரட்டை அணிந்து கொண்டு மாவீரர் தினத்தில் பங்கு பற்றிய நிலையில் அன்றைய தினமே இராணுவத்தினரால் குறித்து இளைஞர் கைது செய்யப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குறித்த இளைஞருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் குறித்த இளைஞர் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன் (22ம் பக்கம் பார்க்க)

